நாடகப்பிரியா *Win*

எஸ்.வி.சேகர் in

# இனிமே நாங்க தான்



MAX

அல்லயன்ஸ்

நாடகப்ப்ரியா

WIN

**S.Ve. சேகர்**

IN

# இனிமே நாங்கதான்

*கதை, வசனம்*

**கிருஷ்ணகுமார்**

*நாடகமாக்கம், இயக்கம், தயாரிப்பு*

**S.Ve. சேகர்**

அறிவே விளக்கு

அல்லயன்ஸ்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு – 2004

© S.Ve. சேகர்

**விலை: ரூ. 45.00**
(வெளிநாடுகளில் US $ 5.00)

அல்லயன்ஸ்

244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி: 2494 1314

இந்த நாடகத்தை, எந்த வடிவிலும், எஸ்.வி. சேகரின் எழுத்துப் பூர்வமான அநுமதி இல்லாமல் பயன்படுத்தக் கூடாது. அமெரிக்கா, கனடா மற்றும் காப்பிரைட் உள்ள நாடுகளில் இவை பதிவு செய்யப் பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

sves@vsnl.com
sveshekher@yahoo.com
sveshekher@hotmail.com

Laser Typeset by – **Print Point Graphics,** Chennai – 20.
Printed at – **Kay Em Packaging Industries,** Chennai – 5.

## நான் அறிந்த எஸ்.வி. சேகர்.

சேகர் மேடை ஏறிய முதல் நாளிலிருந்து அவரை எனக்குத் தெரியும். காளி. என். ரத்னம் காலத்திலிருந்து நான் நகைச்சுவையை ரஸித்து வருபவன். தமிழ் நாடகங்களில் ஒரு அங்கமாக இருந்து வந்த நகைச்சுவை, இப்போது வளர்ந்து வந்து முழுநேர சிரிப்பு நாடகமாக வந்துள்ளது.

அந்தக் காலத்தில், கலைவாணர் என். எஸ். கே., தங்கவேலு, பட்டு, (ஒய். ஜி. பி. யுடன் நாடகங்களை தயாரித்தவர்) சோ, காத்தாடி போன்ற சிறந்த நகைச்சுவை நாடக நடிகர்கள் இருந்தார்கள். அதேபோல இந்தக் காலத்தில் எஸ்.வி. சேகர், கிரேஸி மோகன் ஆகியோரைக் குறிப்பிடலாம். ஒருவரோடு ஒருவரை ஒப்பிட்டுக் கூறுவதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஒவ்வொரு நடிகரும், தனக்கென ஒரு பாணியை நாடகங்களால் கையாளுகின்றனர்.

சேகரின் நாடகங்கள் சந்தோஷமாக சிரித்துப் பார்க்கக் கூடியது. அவர் நாடக அரங்கில் நுழையும் போதே சிரிக்க வைத்துவிடும். இன்றைய டாக்டர்கள் ‘சிரிப்பே சிறந்த மருந்து’ என்று கூறுகின்றனர். சேகர் தன் நாடகங்கள் மூலம் ரஸிகர்களை சிரிப்பில் ஆழ்த்தி, இறுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் கட்டிப் போட்டு விடும் கலையை நன்கு உணர்ந்தவர்.

உங்களுக்கு கவலையை மறக்க வேண்டுமா, சிறந்த மருந்து சேகரின் நாடகங்கள். சுருங்கச் சொன்னால் நாடகங்களால் வரும் நகைச்சுவையும், அதை அவர் சொல்லும் விதமும் மிகவும் ரஸிக்கக் கூடிய வகையில் உள்ளது. அவருடைய ஒவ்வொரு நாடகமும் வெற்றி பெற்றது என்றால் அது மிகையாகாது.



அடுத்த விஷயம். சேகர், மனிதாபிமானம் மிக்க சிறந்த நண்பர். கருணை உள்ளத்தோடு பிறருக்கு உதவி வருபவர், தரும சிந்தனை உள்ளவர். எங்களை எல்லாம் சிரிப்பில் ஆழ்த்தி, மகிழ்ச்சியுடன் நாங்கள் வீடு செல்ல, சேகரின் பணி தொடர வேண்டும் என நான் வாழ்த்து கின்றேன். 25 வருடங்களில் 4000 நாடகங்கள் என்பது ஒரு சாதனைதான். 10,000 வெகு தூரத்தில் இல்லை. டெண்டுல்கரின் வேகமான சதம் போல, சேகரும் அவருடைய நாடகக் குழுவும் விரைவில் 10,000ஆவது நாடகத்தை நடத்த வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நீதிபதி. கே. பக்தவத்சலம்.

## ஒரு மிகப்பெரிய சாதனை!

நாடகத்தைத் தொடர்ந்து நடத்தி, அதுவும் 3500 நாடகங்களை நடத்தி வெற்றி பெற்றிருக்கிறார் திரு. எஸ்.வி. சேகர் என்று சொன்னால் அதைவிட பாராட்டுக்குரிய விஷயம் வேறு ஒன்றும் இருக்க முடியாது.

இந்தக் கலை நசிந்துவிடாமல் காப்பாற்றுகின்ற ஒரு மிகப்பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வருகிறார் என்று எண்ணிப் பார்க்கின்றபோது, உண்மையாகவே நான் பெருமைப்படுகிறேன். அதற்காக திரு. எஸ்.வி. சேகரை நான் பாராட்டுகிறேன்.

அதுவும் – இந்த மாதிரி நாடகம் போடுவது ரொம்ப கஷ்டம்! தினமும் பேப்பர் படிக்க வேண்டும். அப்பப்ப வரும் நிகழ்ச்சிகளை பேசினால் தான் எடுபடும். அதை மிக அழகா திரு. எஸ்.வி. சேகர் கையாண்டிருக்கிறார்.

3,500 என்ன? 35,000 நாடகங்களை நீங்கள் நடிக்க வேண்டும். உங்களை நான் வாழ்த்துகின்றேன். இறையருளும் உங்களுக்கு துணையிருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

**– ஜி.கே. மூப்பனார்,** *3500 வது நாடகவிழாவில்*



## சமர்ப்பணம்

*ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்பார்கள். (PIN) பின்னால் ஓவராக குத்திவிட்டால் சிலசமயம் ஆண்கள் பஞ்சராகிப் போகக் கூடவாய்ப்புண்டு. பிரபல இசை அமைப்பாளர் ஜி. ராமனாதன் அவர்களின் மகள் வயிற்றுப் பேத்தியும், திருமதி. சாய்லக்ஷ்மி, திரு. சங்கரனின் புதல்வியுமான உமாமகேஸ்வரிக்கும் எனக்கும் பெரியவர்களால் நிச்சயம் செய்யப்பட்ட (20-8-1979) திருமணம். எங்களின் நிச்சயதார்த்தத்திற்கு இரண்டு தினங்கள் கழித்து சினிமாவில் நடிப்பதற்கான வாய்ப்பு வந்தது. திருமணத்திற்குப்பின் எங்களின் முதல் தயாரிப்பான அனுராதா சேகருடன் தீபாவளி ரிலீசான கே. பாலசந்தரின் 'வறுமையின் நிறம் சிவப்பு' படத்தின் முதல் காட்சியை பெருமையுடன் பார்த்தோம். உமா என் நாடக திரைப்படத்தின் முதல் ரசிகை மட்டுமல்லாது, உண்மையான விமர்சகியும்கூட. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை எதில் இருக்க*



*வேண்டும், எதில் இருக்கக் கூடாது என்பதில் தெளிவாக இருப்பவள். நியாயமான உதவி கேட்டு வருபவர்களுக்கு என்னைவிட அதிகம் உதவவேண்டுமென்று நினைப்பவள். அதனால்தான் எங்களின் ஸ்ரீ சுகர் பப்ளிக் சாரிடபிள் டிரஸ்டின் டிரஸ்டியாக உமாவும் – மேனேஜிங் டிரஸ்டியாக நானும் – இருந்து நடத்திக்கொண்டு வருகின்றோம். அவளுக்குப் பிடிக்காதது பொய். அதுவும் நான் சொன்னால் உடனே கண்டுபிடித்துவிடுவாள். நகைச்சுவைக்கு வாய்விட்டு சிரிக்கக் கூடியவள். தமிழ்நாட்டில், எங்கள் வீட்டிலும் – அம்மாவுக்குதான் பசங்க பயப்படுவாங்க. தப்புசெஞ்சா தண்டனை உண்டு. சம்பாதிப்பது மட்டும்தான் நான். குடும்ப நிர்வாகம் அனைத்தும் அவள் பொறுப்பு. என் வெற்றிகளுக்குக் காரணமான என் உமாவிற்கு இந்த* ***இனிமே நாங்கதான்*** *நாடகத்தை காணிக்கையாக்குகிறேன்.*

## "மிகப் பெரிய சாதனை"

### 3500 –வது நாடகவிழாவில் V. கோபால கிருஷ்ணன்

23 வருடத்தில் 20 நாடகத்தை அரங்கேற்றம் செய்திருக்கிறார்! கணக்குப் போட்டுப் பார்த்தால் ஒரு வருடத்துக்கு 184 நாடகங்கள்! அதாவது இரண்டு நாளைக்கு ஒரு நாடகம் வீதம் வருகிறது. இப்படி மிகப்பெரிய ஓர் சாதனை செய்தமைக்காக, திரு. எஸ்.வி. சேகர் அவர்களையும் அவரது குழுவினரையும் நான் பாராட்டுகிறேன்.

பலபேரை சினிமாவிற்கும் நாடகத்திற்கும் அறிமுகப்படுத்தக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது! அந்த வரிசையில் என் நாடகக் குழுவில் கலை வாழ்க்கையை துவக்கிய திரு. எஸ்.வி. சேகர் இன்று இந்த அளவுக்குச் சாதனை படைத்திருப்பதைக் காணும் போது எனக்கு பல மடங்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

## பதிப்புரை

எஸ்.வி.சேகர் நாடகங்களை நாடகப் பெருமக்கள் அனைவரும் புகழ்ந்து உள்ளனர். ஆனால், எல்லோரும் படித்து, ரஸித்து புகழ வேண்டாமா? எனவே, அவர்களுக்கு வசதியாக, இவருடைய சிரிப்பு நாடகங்களை எல்லாம் புத்தக வடிவில் வெளியிட்டுள்ளோம். சுமார் 15 வருடங்களுக்கு முன்பே சேகரின் நாடகங்களை புத்தக உருவில் வெளிக் கொண்டு வர ஆர்வம் தெரிவித்தோம். இப்போது அது நிறைவேறியுள்ளது. ஆடியோ சீ.டி., வீடியோ சீ.டி. என்ற வடிவங்களில் அவருடைய நாடகங்கள் ஏற்கனவே வெளிவந்து விட்டன. இப்போது புத்தக வடிவிலும் வெளிவருகிறது.

அவன் ஒரு தனிமரமாக ஆரம்பத்தில் இருந்து, கண்ணாமூச்சி விளையாட்டு போல கிரேஸி தீவ்ஸில் எக்ஸார்ஸிட்டாக புயல் போலக் கிளம்பி, மகாபாரத காலத்திற்குச் சென்று, காதிலே பூவைச் சுற்றிய அவர் காட்டுலே மழை பெய்தது. சேகரின் அந்த வளர்ச்சியை தாங்கிக் கொள்ள முடியாத பலரிடம் ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி, வால் பையனாக மாறி, எல்லாமே தமாஷ்தான் என்று, அடக்கத்துடன், தன்னுடைய நாடகங்களை பார்க்க எல்லாரும் வாங்க என்று அழைக்காமலே வந்த கூட்டத்தை பார்த்த பலர், சேகர் ஒரு அதிர்ஷ்டக்காரன் என்று கூறினர். வீட்டிற்கு மூத்த பிள்ளையாகவும், தந்தைக்கு தோழன் போலவும் விளங்கிய சேகர் – பெரிய தம்பிதான். இசையுலக மாமேதை ஜி.எஸ். ராமநாதனின் வீட்டில் சேகர் சின்ன மாப்பிள்ளையா பெரிய மாப்பிள்ளையா என்று தெரியாது. ஆனால் எப்பவும் நீ ராஜா என்று அவர்களுக்கு இவர் தத்துப் பிள்ளை. நாடக மேடையில் அல்வாவைப் போல் தித்திப்பவர். இவருடைய தந்தை S.V. வெங்கட்ராமன் அவர்களே ஒரு பிரபலமானவர். அவருடைய பிரபலத்தையும் தாண்டிச் சென்றதால், அப்பாவைவிட பெரியவராகிவிட்ட சேகர் ஒரு பெரியப்பாதான். காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் பின்னாலேயே – குழந்தைகள் அம்மாவின் பின் போவதுபோல – சென்று கொண்டிருப்பதால் அவர் ஒரு குழந்தைசாமிதான். அதனால் என்றுமே அவர் நாடகங்களுக்கு மெகா வசூல்.

– **பதிப்பகத்தார்**

## நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்

**(எங்களைப் பற்றி பலரது அபிப்பிராயங்களிற் சில....)**

''தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ வி. குப்புசாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்.'' **– மகாத்மா காந்தி**

''நீதிகளைக் கற்பிக்கும் சிறுகதைகளையும், புதிய நாடகங்களையும், பல மொழி பெயர்ப்புக்களையும், இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகின்றேன்.''

**– மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சுவாமிநாத ஐயர்**

''தமிழில் பல அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன் ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டு கின்றேன்.'' **– ராஜாஜி**

''மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூறவேண்டியதில்லை. அதை நாடறியும். அவர்களால் வெளியிடப் பெற்ற நூல்கள் தமிழ்நாட்டுக்குப் பல வகைகளிலும் பயன் விளைத்து வருவது கண்கூடு. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப்படுவதாக.'' **– திரு.வி.க.**

''இந்தப் புத்த வெளியீட்டின் மூலம் அல்லயன்ஸ் கம்பெனியார் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்து வருகிறார்கள்.'' **– கி.வா.ஜ.**

It gives us pleasure to congratulate the publishers The Alliance co., Mylapore, on the uniform standard of excell|nce they have been able to maintain and the wide variety and range of useful subjects dealt. **– The Hindu**

The Alliance Co., that enterprising publishers of Madras deserves the thanks of all lovers of Tamil for the service to the language... **– Sunday Times**

உண்மையில் இந்தப் புத்தக வெளியீட்டை ஒரு வியாபார விஷயமாகச் சொல்வதற்கே இல்லை. அல்லயன்ஸார் தமிழ்நாட்டுக்குச் செய்து கொண்டிருக்கும் ஒரு அரும்பெரும் தொண்டு என்றுதான் சொல்ல வேண்டும்... தமிழ்நாட்டில் மறுமலர்ச்சி இயக்கம் புத்தக பைண்டுத் தொழிலுக்குக்கூட ஏற்பட்டிருக்கிறதென்பதற்கு அல்லயன்ஸ் புத்தகங்கள் அத்தாட்சி. **– கல்கி**

வெகு அழகான புத்தகங்களை அல்லயன்ஸார் தயாரிப்பதன்மூலம் தமிழ்நாட்டுக்கே பெருமையும் மதிப்பும் வாங்கிக் கொடுத்து இருக்கிறார்கள்.

**– ஆனந்த விகடன்**

## அல்லயன்ஸ் நூற்றாண்டு விழாவில்...

**திலகவதி** : இந்த விழாவிலே கலந்து கொள்வது, சம்பிரதாயமான முறையில் சொல்லவில்லை, உண்மையிலேயே ஒரு பெருமைக்குரிய விஷயம் என்று நான் கருதுகிறேன். என்னுடையப் படிப்புப் பழக்கம் அப்படிங்கறத நினைச்சுப் பாக்கறபோது, ஒரு வேளை முதன் முதல்ல நான் படிக்கத் தொடங்கிய புத்தகம் அல்லயன்ஸ் நிறுவனத்தின் புத்தகமாகத்தான் இருக்கும், இருந்திருக்கும் அப்படின்னு நான் நினைத்துப் பார்ப்பதுண்டு. என்னுடைய தனி அனுபவத்தில், என்னுடைய சொந்த வாழ்க்கையோடு தொடர்புள்ள ஒரு நிறுவனத்தினுடைய முக்கியமான ஒரு நிகழ்வில் கலந்து கொள்கின்ற ஒரு நிறைவு ஒரு மகிழ்ச்சி எனக்குள் இருக்கிறது... ஸ்ரீநிவாஸனுடைய உழைப்பும் அவருடைய முயற்சியும், அவர் யாருடைய புத்தகங்களை வெளியிட வேண்டும் என்று செய்து கொண்டிருக்கின்ற தேர்ச்சியும், இதெல்லாம் வந்து It must have come in Genes என்று நினைக்கிறேன்....

**சோ** : நூற்றாண்டுக்கு மேல் ஒரு புத்தக நிறுவனம், அதுவும் தமிழ்ப் புத்தக நிறுவனம் நடத்துவது என்பது ஒரு சாதாரண காரியமல்ல. அது ஒரு அற்புதம் என்றே சொல்லிவிடலாம்... நூறாண்டுகளாகத் தொடர்ந்து வெற்றி ஈட்டிக் கொண்டு வருகிறது என்றால் அதனுடைய நிர்வாகிகளின் மனோ தைரியமும், சத்தியமும்தான் அவர்களுக்குத் துணையாக நிற்கின்றன என்று அர்த்தம்... கீழ்த்தரமான ரஸனைகள் அதிகமாக இருக்கிற காலத்திலும், இப்படி ஆச்சாரமாக ஒரு புத்தக நிறுவனம் நடக்கிறது என்பது அசாத்தியமான விஷயம். ஸ்ரீநிவாஸனுடைய உழைப்பை நான் நேரில் பார்த்திருக்கிறேன்... இவரை நல்லா எனக்குப் பழக்கமுண்டு. இந்த நிறுவனம் மேலும் மேலும் பல ஆண்டுகள் நன்றாக நடக்கும் என்பதில் எனக்கு சற்றும் சந்தேகம் கிடையாது. பேரப் பாருங்களேன் 'அல்லயன்ஸ்'. சாதாரணமாக அல்லயன்ஸ்னாக்கா ஒரு எலக்ஷன் வரைக்கும் கூட தாங்காது. நூறு ஆண்டுகள் தாங்கின அல்லயன்ஸ் இந்தியாவிலேயே இது ஒண்ணுதான் இருக்கும்.

**லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி** : தமிழ் வெளியீட்டுத் துறையிலேயே இது ஒரு வரலாறு காணாத ஒரு சம்பவம். நூறு ஆண்டுகள் ஒரு நிறுவனம், தமிழ் நூல்களை வெளியிட்டு வருகிறது என்றால், என்னால் நம்பவே... முடியல. ஆனா, ஒவ்வொரு தமிழனும் தன் நெஞ்ச நிமிர்த்தி, இந்த உலகின் முன்பே எப்படிப்பட்ட நூல்கள், இந்த சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு போலவே இருக்கின்ற பட்டியலை வாசித்துப் பார்த்தால் அந்த சுதந்திரப் போராட்ட வரலாற்றைப் படித்தது போல இருக்கிறது. அவ்வளவு அருமையான நூல்கள்... இந்த அல்லயன்ஸ் நிறுவனம் பல்லாண்டு காலம் இதேபோல், நல்ல நூல்களைத் தமிழ் மக்களுக்கு வழங்கி, எத்தனை இன்னல்களை, எத்தனை



சவால்களை அவருடைய (ஸ்ரீநிவாஸனுடைய) தாத்தா, அப்பா காலத்திலிருந்தே எதிர்கொண்டார்களோ, அத்தனை சவால்களையும் மீறி இளைய தலைமுறையும் இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு அவரை வாழ்த்துகிறேன்.

**கவிஞர் வாலி** : ஸ்ரீநிவாஸன்கிட்ட ஒரு பிரமாதமான குணம் என்னன்னா, அவர் ஒரு கவர்ச்சிப் புயல். பார்த்தவர் யாரையும் ஈர்த்திடுவார் அவர். அவர் நல்ல பண்பாளர். நயத்தகு நாகரீகம் மிக்க மனிதர். உங்களுக்கு அல்லயன்ஸ் பத்தி தெரிஞ்சிக்கணுன்னா தமிழ்த் தென்றல் திரு.வி.க., தமிழ்த் தாத்தா உ.வே.சா., ஆதில்ல காந்தி. So காந்தி அதிலேந்து ஆதரிச்சிருக்கார். இப்ப இத ஆதரிச்சது சோ... என்ன பாருங்க இந்த அல்லயன்ஸ் விழா ஒரு அற்புதமான விழா....

**எம். கோபாலகிருஷ்ணன்** : என்னுடைய இளைய சகோதரனைப் போன்றவர் ஸ்ரீநிவாஸன். திரு. ஸ்ரீநிவாஸன் அவர்களாலே இன்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியது எல்லாம், பல இளைஞர்கள் இன்றைக்கு முன்னோடிகள் இல்லாமல் தவிக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் திரு. ஸ்ரீநிவாஸன் ஒரு பெரும் முன்னோடி என்றுதான் சொல்ல வேண்டும். உழைப்பு, உண்மை, தரம், மனிதநேயம், பணிவு இவை அத்தனையும் ஒருங்கே கொண்டு, நேர்மை இவைகளுக்கெல்லாம் ஒரு இலக்கணம் வகுக்க வேண்டுமென்றால் திரு. ஸ்ரீநிவாஸன் அவர்களைச் சொல்லலாம்... நல்ல ஒரு இளைஞரை இன்றைக்கு நாம் நிச்சயமாகவே, இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் இன்னும் நல்லவர்கள் இருக்கின்றனர் என்பதற்கு நமக்கு நம்பிக்கை வரக்கூடிய அளவிலே திரு. ஸ்ரீநிவாஸன் அவர்களுடைய இந்த முயற்சி இருக்கிறது என்று நினைக்கின்றேன். அவர்கள் (கம்பெனியின்) கட்டடத்தைப் பார்த்தாலே தெரியும். அவர்கள் வளர்ந்தார்கள் என்பது அல்ல, கவிஞர் வாலி கூறிய மாதிரி, அவர்கள் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ நடத்திக் கொண்டிருக்கிறார்கள் வாழ்க்கையை, என்பதைத் தவிர, இந்தத் தமிழ் சமுதாயத்திற்கு, இலக்கிய உலகத்திற்குப் பெரிய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

**ஸ்ரீநிவாஸராகவன்**

அலையெனத் திரண்டு மக்கள்
அல்லயன்ஸைப் பாராட்ட வந்தீர்
கலையாது கூடிக் கேட்பீர்
கவியொன்று சொல்ல வந்தேன்
நிலையாகும் வாழும் தமிழில்
நீங்கள் தந்த புத்தகங்கள்
தலையாகக் கொண்டு பெற்ற
தாரணியில் வாழ்க வாழ்க

அறிவே விளக்கு என்று தங்களுக்கென்று ஒரு சின்னம் வைத்திருப்பவர்கள், வேத வாழ்க்கையான ''ஸதமானம் பவதி'' என்று நூறு வருஷம் வாழ்ந்ததில் எந்தவிதமான ஆச்சர்யமும் இல்லை. குன்றிலிட்ட விளக்கு என்று சொல்லுகின்றது மரபு. குன்றிலிட்ட விளக்காக இருக்கின்ற இடத்தை போற்றிப் பாராட்டுகின்ற ஒரு பான்மை தமிழகத்தில் உண்டு. அப்படி இருக்கின்ற இந்த இடத்தில் இவர்கள் நூறு ஆண்டுகள் வாழ்ந்ததைப் பற்றி பாராட்டுவதற்கு நீங்கள் திரண்டு வந்ததில் எந்தவிதமான ஆச்சர்யமும் இல்லை... எல்லாக் கருத்துக்களையும், பல மொழிகளிலிருந்தும் கொண்டு வந்து கொடுக்கின்ற இந்த அல்லயன்ஸ் பதிப்பகம் நூறு ஆண்டு காலங்கள் வாழ்ந்தது அதனுடைய இயல்பு. அதைப் போற்றுவதன் மூலமாக நாம் பெருமை அடைகிறோம்... இத்தகைய சிறந்த செயல்பாடுடைய ஒரு நிறுவனம் ஆண்டாண்டு காலமாக – நூறாண்டு காலமாக வாழ்ந்தது என்பது இப்போது சரித்திரம். இனி வாழப் போகிறது என்பது நிகழ்வு. அதற்கு இன்று அலையாகத் திரண்டு வந்திருக்கின்ற அனைவரும் இறைவனிடம் வேண்ட வேண்டும் என்பது நம்முடைய அவா...

சிறப்பு அஞ்சல் உறையை வெளியிட்டு, இந்த நூறாண்டு காலம் வாழ்ந்தீர்கள், இந்த உறை – இந்தச் செய்தியை உலகுக்கெல்லாம் சொல்லும் என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு செய்திதான் – அதைத்தான் நாங்கள் செய்திருக்கிறோம். அல்லயன்ஸ் கம்பெனியைப் போற்றுவதன் மூலம் இந்திய அஞ்சல் துறை சிறப்படைகிறது. இந்திய அஞ்சல் துறையின் மூலமாக இந்த சிறப்பு அஞ்சல் உறையை வெளியிடுவதன் மூலம் அல்லயன்ஸும் பெருமையடைகிறது.

**நடிகர் சிவகுமார்** : தீரர் சத்தியமூர்த்தியின் மகள், சற்று நேரத்திற்கு முன்பு நினைவுச் சின்னங்களைக் கொடுத்து ஆசீர்வாதம் செய்தார். அவருக்கு அல்லயன்ஸ் சார்பிலே நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அல்லயன்ஸ் நிறுவனத்துக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு கொஞ்சம் சுவையானது. திலகவதி அவர்கள் சொன்னது போல, எனக்கும் காண்டேகர்தான் காரணமானவர். ஒரு பத்து ஆண்டுகளிலே இதைப் போன்ற புத்தகங்களை நான் படித்ததில்லை. படித்து ஆடிப் போய்விட்டேன். உடன் நண்பர்களுக்கெல்லாம் புத்தகத்தை வாங்கிக் கொடுக்க ஆரம்பிச்சேன். அதன் பிறகு நானே நேரடியாக அல்லயன்ஸுக்கு வந்தேன். அங்க வந்து பார்த்தா பிரமிச்சுப் போய்விட்டேன்!... பெரிய பெரிய கொட்டைப் போட்ட எழுத்தாளர்கள், மணிக்கொடி காலத்து எழுத்தாளர்கள்... எக்கச்சக்கமான புஸ்தகங்கள் இருக்கு... எல்லாம் அருமையான புஸ்தகங்கள்... இந்த அல்லயன்ஸ் பல நூற்றாண்டுகளைக் காண வேண்டும் என்று வாழ்த்தி வேண்டுகின்றேன்.

---

## S.Ve. சேகர் நாடகங்களும், பிற நூல்களும்

கண்ணாமூச்சி
திரும்பி வந்த மனைவி
பாலவாக்கத்தில் திருடர்கள்
ஒரு சொந்த வீடு வாடகை வீடாகிறது
ஆவியே உன்னை ஆராதிக்கின்றேன்
மகாபாரதத்தில் மங்காத்தா
காதுல பூ
காட்டுல மழை
ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி
வால் பையன்
எல்லாமே தமாஷ்தான்
எல்லாரும் வாங்க
அதிர்ஷ்டக்காரன்
யாமிருக்க பயமேன்
பெரிய தம்பி
சின்ன மாப்ளே! பெரிய மாப்ளே!
எப்பவும் நீ ராஜா
தத்துப் பிள்ளை
அல்வா
பெரியப்பா
குழந்தசாமி
எஸ்.வி.சேகர் பதில்கள்: பகுதி – I
எஸ்.வி.சேகர் பதில்கள்: பகுதி – II
மனைவிகள் ஜாக்கிரதை
ஜஸ்ட் ஜாலி: பகுதி – I
ஜஸ்ட் ஜாலி: பகுதி – II
சிரிப்பு உங்கள் சாய்ஸ்
இது ஆம்பிளைங்க சமாச்சாரம்
இனிமே நாங்கதான்
தேவை ஒரு மாப்பிள்ளை
நாட்டு நடப்பு: பகுதி – I
நாட்டு நடப்பு: பகுதி – II
ஏழு மாதங்கள் – ஏழு நாடுகள்

*(இன்னும் சிரிப்பு வரும்)*

## காட்சி – 1

**இடம்** **சிவராமகிருஷ்ணன் வீடு**

**பாத்திரங்கள்** **கோ. லிங்கேஸ்வரன், சிவராமன், கல்யாணம்**

கோ.லிங் : ஆண்டவா! எல்லாரையும் நல்லபடியா வைப்பா. என்ன சிவராமா... சௌக்யமா?

சிவராமன் : வாப்பா கோலி! வா.

கோலி : என் பேரு கோ. லிங்கேஸ்வரன். எல்லாரும் என்னை மரியாதையா ஒழுங்கா கூப்பிடறாங்க. நீதான் கிண்டலா கூப்பிடறே. நான் என்ன வெறும் கோலியா?

சிவராமன் : டூமா கோலி... அதான் பெரிய சைஸ் கோலி... குடும்பத்தையே சின்னதா வச்சுக்கணும்னு கவர்ன்மெண்ட்ல சொல்றாங்க. நீ உன் பேரை பெருசா கூப்பிடணும்னு சொல்ற. வந்த விஷயத்தை சொல்லு.

கோலி : சந்தோஷமான விஷயம்தான்... உன்னை கடல்ல தள்ளிவிடப் போறேன்.

சிவராமன் : என்ன! என்னய்யா சொல்ற...?

கோலி : உன்னை சம்சார கடல்ல தள்ளிவிடப் போறேன்னு சிம்பாலிக்கா சொன்னம்பா.

சிவராமன் : சரி ரெண்டும் ஒண்ணுதான். வீட்டு புரோக்கரா இருந்த... இப்ப கல்யாண புரோக்கரா மாறிட்டியா?



கோலி : அதெல்லாம் ஒண்ணும் இல்லப்பா, எனக்கு வேண்டப்பட்ட பொண்ணு, Infact அந்த பொண்ணுக்கு நான் மாமா மாதிரி.

சிவராமன் : அடப்பாவி! கடைசியிலே இதுக்கு புரோக்கர் ஆயிட்டியா!

கோலி : அட என்னப்பா நீ! அந்த பொண்ணு எனக்கு தூரத்து சொந்தம்.

சிவராமன் : ஓஹோ...

கோலி : நான் அந்த பொண்ணுக்கு மாமா முறைன்னு சொல்ல வந்தேன்.

சிவராமன் : நான் ஒரு நிமிஷத்துல பயந்தே போயிட்டன்ய்யா...

கோலி : அப்பா, பொண்ணு இரண்டே பேர்தான்... அம்மா இல்லை.

சிவராமன் : அப்புறம் எப்படி பொண்ணு?

கோலி : ச்சே... தவறிட்டாங்கன்னு சொன்னம்பா.

சிவராமன் : அப்படியா!

கோலி : கிராமத்துல இருந்து வந்தவங்க. பொண்ணுக்கு கல்யாணத்த முடிச்சுட்டு காசி ராமேஸ்வரம்னு போயிடலாம்னு நினைச்சுகிட்டு இருக்காரு. அதுக்கு ஏத்தா மாதிரி உங்க அண்ணனும் உனக்கு கல்யாணம் பண்ணப் போறதா சொன்னாரு.

சிவராமன் : ஹுூம்.

கோலி : நம்மாலே ஒரு நல்ல காரியம் ஆகட்டுமேன்னு நெனச்சேன்... இந்தா பொண்ணு போட்டோ.

சிவராமன் : என்னய்யா இது! நாரதர் பழத்தை வச்சு கலகத்தை ஆரம்பிச்ச மாதிரி நீ போட்டோவ வச்சு கலகத்தை ஆரம்பிக்கிறியா?

கோலி : அது ஞானப்பழம்.

சிவராமன் : இது ஞான போட்டோவா?

கோலி : போட்டோவ பாரு... எப்படியிருக்கு?

சிவராமன் : பிரின்ட் சூப்பரா இருக்கு... கோனிகாவா!

கோலி : அதில்லயா, பொண்ணு குஷ்பு மாதிரியா? இல்ல, ரேவதி மாதிரியா?

சிவராமன் : சில்க் சுமிதா மாதிரி... என்னய்யா பொண்ணு ஜட்டியோட நிக்குது.

கோலி : அய்யய்யோ!... இது என் அண்ணன் குழந்தை போட்டோப்பா.

சிவராமன் : இதுக்குத்தான் கோலி விளையாடற பசங்க கிட்ட இந்த வேலையெல்லாம் சொல்ல கூடாதுங்கறது.

கோலி : சரி நான் சொன்ன நடிகைகளை உனக்கு பிடிக்கலேன்னு வச்சுக்க... உனக்கு பிடிச்ச நடிகை யாரையாவது வச்சுக்க.

சிவராமன் : யோவ் கிண்டலா... என்னது நீ வீட்டு புரோக்கரா இல்ல... என்னது....!

'ரேடியோவில் பாடல் ஒலிக்கிறது. மாமா... மாமா...'

கோலி : ரேடியோவ நிறுத்துப்பா. அதாவது, உனக்கு புடிச்ச நடிகையை நினைச்சுக்கன்னு சிம்பாலிக்கா சொன்னேன்.

சிவராமன் : இதோ பார் நீ சிம்பாலிக்கா பேசறேன்னு ஏதுவாவது உளர்ன... சோடாவுக்குள்ள போட்டுருவேன். ஆமா பொண்ணு பேரு என்ன?



கோலி : வைஜெயந்தி I.P.S.

சிவராமன் : வெளியில போய்யா... நான் பொண்ணு பேர கேட்டா சினிமா பேர சொல்றியா.

கோலி : நானும் பொண்ணோட பேரதாம்பா சொன்னேன். IP அவங்க குடும்ப இன்ஷியல்..

சிவராமன் : IP யா...!

கோலி : அப்பாவோட இன்ஷியலையும் சேர்த்து கிட்டதால IPS ன்னு ஆயிடுச்சு.

சிவராமன் : அப்பா பேரு என்ன?

கோலி : சேதுபதி, IPS. அவங்க பரம்பரையே IP கொடுத்த பரம்பரைப்பா. அதான் IP கூடவே ஒட்டிகிச்சு.

சிவராமன் : அப்படி ஒட்டிகிச்சா... கல்யாணத்த நிச்சயம் பண்ணிட்டு கடைசியில அதுக்கும் IP கொடுத்துற மாட்டாங்களே.

கோலி : நீ மட்டும் ஒகேன்னு சொல்லு... கதைய முடிச்சுடுவோம்.

சிவராமன் : யோவ்... இப்பத்தான் கதையே ஆரம்பிச்சிருக்கு, அதுக்குள் முடிச்சுடு வோங்கறியா! எனக்கு வாழ்க்கையில சில லட்சியம் எல்லாம் இருக்கு. இரண்டு வருஷத்துக்கு அப்புறம்தான் வச்சுக்க போறேன் கல்யாணத்தை.

(கல்யாணம் சிவராமனின் அண்ணன்; உள்ளே வருதல்)

கல்யாணம் : அவன் என்ன நினைக்குறது, நான் நெனைச் சுட்டேன். சம்பந்தத்த முடிச்சுடு. இந்த வீட்டுக்கு விளக்கேத்த ஒரு பொண்ணு வரணும்.

சிவராமன் : யோவ். இல்லாட்டா இங்க விளக்கே எரியாதா? சரி, அப்ப இருட்லியா வாழ்க்கை நடத்தற? யோவ் கோலி நான் சொன்னதுதான் முடிவு.

கல்யாணம் : மூத்தவன் நான் சொல்றதுதான் முடிவு.

கோலி : இப்படி ரெண்டுபேரும் என்னை உருட்டறிங்களே.

சிவராமன் : கோலிய வச்சுட்டு பல்லாங்குழியா வெளை யாட முடியும். உருட்டத்தான் முடியும்.

கல்யாணம் : வர்ற வெள்ளிக்கிழமை பொண்ணு பார்க்க வர்றோம்னு போய் சொல்லு.

சிவராமன் : யோவ் பொண்ணை இவருக்கு பிடிச்சு போச்சு... இவரே கல்யாணம் பண்ணிப்பாரு.

கல்யாணம் : என்னடா சொன்ன? நான் கல்யாணம் செஞ்சிப் பேன்னா?

சிவராமன் : ஆமாம்.

கல்யாணம் : என்னை பார்த்து என்ன வார்த்தைடா சொல்லிட்ட.

(குழந்தை அழும் ஒலி)

சிவராமன் : அண்ணா அண்ணா...

கோலி : என்னாச்சு இவருக்கு

சிவராமன் : ஒண்ணுமில்ல. அவர் சோகத்தை அப்படித்தான் வெளிப்படுத்துவாரு. தலையெழுத்து.

கல்யாணம் : என்னை பார்த்து இந்த வார்த்தைய சொல்ல உனக்கு எப்படிடா தைரியம் வந்தது. கல்யாண வயசுல தாலிய பிடிக்க வேண்டிய கையினாலே உனக்காக கரண்டிய பிடிச்சவன்டா.

சிவராமன் : நீ எந்த வயசுல எத கரெக்டா புடிச்சிருக்கே...? படிக்க வேண்டிய வயசுல புஸ்தகத்துக்கு





பதிலா கில்லிதாண்ட புடிச்ச... அதனால இப்ப கரண்டிய புடிச்சிட்டிருக்கே. என்னமோ டயலாக் வுடுறியே.

கல்யாணம் : உனக்காக இருபத்து ஐந்து வருஷமா ஒரு கல்யாணம் கூட செய்துக்காம இருக்கேன்டா.

சிவராமன் : இருபத்து ஐந்து வருஷத்துல இருபது கல்யாணமா பண்ணிப்பாங்க. ஒரு கலியாணம் கூட செஞ்சுக்கலியாக்கும்.

கல்யாணம் : தயவுசெஞ்சு என் மனசை புண்படுத்தாதேடா. மறந்து கூட இந்தக் கதைய திருப்பி ஞாபகப்படுத்தாதடா.

கோலி : சோகக் கதையா அது! என்ன சோகக் கதை?

கல்யாணம் : காலம் வரும்போது சொல்றேன்

சிவராமன் : ஆரம்பிக்கும் போது சோகக் கதை இருக்குன்னு சொல்லிட வேண்டியது. ஆனா, கடைசி வரைக்கும் அது என்னன்னு சொல்லவே மாட்டாங்க.

கல்யாணம் : என்னடா சொன்னே!

சிவராமன் : சரி சரி அழ ஆரம்பிச்சுடாதே... நான் பொண்ணு பார்க்க வரேன். இல்லன்னா சோகக் கதைய சொல்லி என்னை சோகமாக்கிடுவே. ஏய்யா! இவ்ளோ அழுதாரே இவர் கண்ணுலயிருந்து ஒரு சொட்டு தண்ணி வந்ததா பார்த்தியா...!

கல்யாணம் : கிளிசரின் போட்டுக்க மறந்துட்டேன்டா.

சிவராமன் : அடப்பாவி!

கோலி : நான் போயி கல்யாண பொண்ண ரெடி பண்ணிடறேன்.

– திரை –

## காட்சி - 2

| | | |
|---|---|---|
| இடம் | : | சேதுபதி வீடு |
| பாத்திரங்கள் | : | சேதுபதி, வைஜெயந்தி, கோலீஸ்வரன் |

(பாடல் ஒலிக்கிறது) கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே.

சேதுபதி IPS : வைஜெயந்தி... அம்மா வைஜெயந்தி.

வைஜெ IPS : என்னப்பா. எங்கிட்ட சொல்லாம கொள்ளாம இப்படி திடீர் திடீர்னு வெளில கிளம்பி போய் என்னையே கவலைப்பட வைக்கறிங்க?

சேதுபதி : இந்த சேதுபதி IPS துண்டை தோள்ல போட்டான்னா அதுக்கொரு காரணம் இருக்கும். வேட்டிய இடுப்புல மடிச்சு கட்டுனா அதுக்கு ஒரு காரணம் இருக்கும். இடுப்புக்கு கீழே...

வைஜெயந்தி : அப்பா!

சேதுபதி : வேட்டிய இடுப்புக்கு கீழே இறக்கி விட்டா அதற்கும் ஒரு காரணம் இருக்கும்மா.

வைஜெயந்தி : அப்படி என்னதான் காரணம்

சேதுபதி : உனக்கு மாப்ள பார்க்கத்தான்.

வைஜெயந்தி : மாப்ளைக்கும் வேஷ்டிக்கும் என்னப்பா சம்பந்தம்.

சேதுபதி : என்னம்மா இப்படி சொல்லிட்ட... இந்த காலத்துல ஒருத்தன் பொண்ணை பெத்துட்டான்னா, வக்கிலா



இருந்தா என்ன? மந்திரியா இருந்தா என்ன தெருவுக்கு வந்து தானே ஆகணும்.

வைஜெயந்தி : எனக்கு மாப்ளை தேடறேன்னு ஒரு ஆபிஸ் வாசல்லயும் பஸ் Standலயும் நிக்கறிங்களாம். பிரெண்டெல்லாம் சொல்றாங்க.

சேதுபதி : ஏன்... சினிமா தியேட்டர் வாசல்ல பார்க்கலியா.

வைஜெயந்தி : உங்க அப்பா உனக்கு மாப்ளே தேடறாரா இல்ல சினிமா எடுக்க ஹீரோ தேடறாரான்னு கிண்டல் பண்றாங்க. உங்க பேருதான் சேதுபதி IPS...

சேதுபதி : Yes... அம்மா வைஜெயந்தி எதபத்தி வேணுன் னாலும் பேசும்மா...

வைஜெயந்தி : உம்.

சேதுபதி : IPS பத்தி மட்டும் பேசாதம்மா... என்னால தாங்க முடியாது. முன்னாடி ஒரு சோகக் கதையே இருக்கும்மா... அதை நெனைச்சா...

(குழந்தை அழும் சத்தம்)

வைஜெயந்தி : (சோர்வாக) அய்யோ அப்பா போதும் நிறுத்துங்கப்பா.

சேதுபதி : சரிம்மா... சரி

வைஜெயந்தி : எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லே இருந்து இதே அழுகைதான்.

சேதுபதி : எம் மாப்ளையை எங்க வேண்ணாலும் தேடு வேன்... ஏன்னா வரப்போறவன் எம் பொண்ணுக்கு மட்டும் புருஷனா இருக்கக் கூடாது.

வைஜெயந்தி : அப்பா...!

சேதுபதி : இந்த ஊருக்கே அரசனா இருக்கணும்னு சொல்ல வந்தம்மா... உனக்குன்னு ஒரு பையன் பொறக்காமலா இருப்பான்.

(கோலி வருதல்)

கோலி : பொறந்துட்டான்... உங்க பொண்ணுக்கு பையன் பொறந்துட்டான்.

சேதுபதி : அடடே! வாய்யா கோலி. என் பொண்ணுக்கு இன்னும் கல்யாணமே ஆகலை. அதுக்குள் பையன் பொறுந்துட்டான்னு சொல்ற.

கோலி : உம் உங்க பொண்ண கல்யாணம் செய்துக்க பையன் பொறந்துட்டான்னு சிம்பாலிக்கா சொன்னேன்.

சேதுபதி : இத முன்னாடியே ஒழுங்கா சொல்லக் கூடாதா? பையன் யாரு... குடும்பம் எப்படி.

கோலி : நல்ல குடும்பம்தான்... வைஜெயந்திக்கு பொருத்த மான பையனா இருப்பான்... என்னம்மா வைஜெயந்தி!

வைஜெயந்தி : போங்க மாமா.

கோலி : வெட்கமா.

சேதுபதி : பையன் என்ன செய்யறான்.

கோலி : ஊர சுத்தறான்.

சேதுபதி : ஊரை சுத்தறவனுக்கெல்லாம் என் பொண்ணை கொடுக்கணுமா?

கோலி : பையன் Sales ஆபிஸரா இருக்கான்... ஊர் ஊரா சுத்தற வேலை. அதான் சிம்பாலிக்கா சொன்னேன்.

சேதுபதி : நீ விளக்கமா சொன்னாலே புரியாது. சிம்பாலிக்கா சொன்னேன்னு உயிர வாங்கற.



கோலி : பையன் பேரு சிவராமகிருஷ்ணன். பையனுக்கு ஒரே அண்ணன், பேரு கல்யாணம். ஆனா, கல்யாணமே செஞ்சுக்கலை. தம்பிக்கு கல்யாணம் செஞ்சுவச்சுட்டு தான் சந்தோஷமா இருக்கணும்னு நெனைக்கிறாரு.

சேதுபதி : என்னய்யா சொல்ற.

கோலி : தம்பிக்கு கல்யாணம் செஞ்சு வச்சாலே பெரிய சந்தோஷம்தானே... அதத்தான் சிம்பாலிக்கா சொன்னேன். வர்ற வெள்ளிக்கிழமையே பொண்ணு பார்க்க வர்ரேன்னு சொல்லிட்டாங்க.

சேதுபதி : எப்படியோ கோலி, ஊர்ல உறவுன்னு சொல்லிக்க நீ ஒருத்தன்தான் இருக்கே. எல்லாம் நல்லபடியா முடியணும்.

கோலி : நல்லபடியா முடியும்யா. ஆனா ஒரு முக்யமான விஷயம்.

சேதுபதி : என்ன! பையனுக்கு மூளை சரியில்லையா.

கோலி : அட! அதில்லப்பா. பொண்ணு பார்க்க வர்றப்ப சொஜ்ஜி பஜ்ஜியோட ரசகுல்லாவும் செஞ்சு வைங்க.

சேதுபதி : ஏன் பையனுக்கு பிடிக்குமோ.

கோலி : இல்ல எனக்கு பிடிக்கும்.

– திரை –

## காட்சி – 3

இடம் : சேதுபதி வீடு
பாத்திரங்கள் : சேதுபதி, வைஜெயந்தி, கோலீஸ்வரன், சிவராமன், கல்யாணம், பொன்னுரங்கம்

(சின்னஞ்சிறு வயதில் எனக்கோர் சித்திரம் தோணுதடி. மீண்டும் கோகிலா பாடல் ஒலிக்க)

கோலி : சேதுபதி! சேதுபதி

வைஜெயந்தி : வாங்க மாமா வாங்க

கோலி : என்னம்மா இது! மாப்ள வீட்டுகாரங்கள்ளாம் வந்துட்டு இருக்காங்க. நீ என்ன மசக்கையா நின்னுகிட்டு இருக்கே.

வைஜெயந்தி : மசக்கையா? யாருக்கு?

கோலி : மசமசன்னு நிக்கறியேன்னு சொல்ல வந்தேன்... வாய் தவறி சொல்லிட்டேன்.

சேதுபதி : ஏய்யா... நீ என்னைக்கு ஒழுங்கா பேசியிருக்கே. வரப்போறது யாரு? இந்த சேதுபதி IPSக்கு மாப்ளையா வரப்போறவரு! அசத்திட மாட்டேன்.

சேதுபதி : வாங்க மாப்ள வாங்க

சிவராமன் : என்னது மாப்ளையா!

சேதுபதி : புரியது... என்னடா... இப்பத்தானே பொண்ணு பார்க்க வர்றோம். அதுக்குள்ள மாப்ளேன்னு சொல்றேன்னு பார்க்கறீங்களா? எங்க வீட்டுக்கு



பொண்ணு பார்க்க யார் வந்தாலும், அவங்க எங்க வீட்டு மாப்ள மாதிரிதான்.

சிவராமன் : என்னது? என்னது?

சேதுபதி : அதாவது உங்களபத்தி கோலி நிறைய சொல்லியிருக்கான். அப்பவே நீங்கதான் எங்க மாப்பிள்ளைன்னு முடிவு பண்ணிட்டேன்.

சிவராமன் : ஹ...ஹ...ஹ...

சேதுபதி : கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.

சிவராமன் : ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுடாதிங்க

கல்யாணம் : சரி பொண்ணை கூப்பிடுங்க.

சேதுபதி : பொன்னுரங்கம்... பொன்னுரங்கம்.

சிவராமன் : பொன்னுரங்கமா? பொண்ணு பேரு வைஜெயந்தின்னு சொன்னாங்க.

சேதுபதி : பொண்ணு பேரு வைஜெயந்திதான்.

சிவராமன் : செல்லமா பொன்னுரங்கம்னு கூப்பிடுவிங்களா!

சேதுபதி : தமாஷு நீங்க. இல்லிங்க; பொன்னுரங்கம் எங்க ஊர் பையன்.

சிவராமன் : ஓ...

சேதுபதி : பொன்னுரங்கம் எங்க ஊர்ல எல்லா நல்ல காரியங்களுக்கும் அவன்தான் கூத்து கட்டி பாடுவான். நீங்க பொண்ணு பார்க்க வந்திங்களேன்னு உங்களுக்கு ஒரு வித்யாசமான வரவேற்பு கொடுக்கலாம்னு வரவழைச்சேன். பொன்னுரங்கம்.

(பொன்னுரங்கம் பாடுதல்)
தாங்கடதத்த....
கிழக்கு வாசல் பாடல் ஒலிக்க

சிவராமன் : யோவ் கோலி! பொண்ணு போட்டாவ காமிச்சு குஷ்பு மாதிரியா... ரேவதி மாதிரியான்னு கேட்டதுக்கு அர்த்தம் இப்பத்தான் புரியது. கிழக்கு வாசல் ரேஞ்சுக்கு போயிட்டியே நீ!

சேதுபதி : எங்க ஊர்ல குழந்தை பொறந்தாலும் இவன் தான் பாடுவான்.

கோலி : குழந்தை வயசுக்கு வந்தாலும் இவன்தான் பாடுவான்.

சிவராமன் : குழந்தை வயசுக்கு வருமா.

கோலி : குழந்தை பெருசாயி வயசுக்கு வந்தாலும் இவன் தான் பாடுவான்னு சிம்பாலிக்கா சொன்னேன்.

சிவராமன் : இனிமே நீ சிம்பாலிக்கா பேசுன, வர்ற வழியிலே நாலு சின்னப் பசங்க கோலியாடனும், கோலி குறையுதுன்னாங்க. உன்னை கொடுத்துருவேன். ஆமா குழந்தை பிறந்தா என்ன பாடுவீங்க?

(பொன்னுரங்கம் பாடுதல்)
போனால் போகட்டும் போடா
இந்த பூமியில்
நிலையாய் வாழ்ந்தவர் யாரடா
போனால் போகட்டும் போடா

சிவராமன் : என்னது இது!

சேதுபதி : உங்கள பார்த்ததும் உணர்ச்சி வசப்பட்டுட்டான்.

சிவராமன் : அப்படியா. பாட்டுக்கு பாட்டு வாய்ஸ் மாறு படுதே.

சேதுபதி : மாப்ளைக்கு வரவேற்பு கொடுக்கற மாதிரி ஒரு பாட்டு பாடுடா.



(பொன்னுரங்கம் பாடுதல்)
வாங்க மச்சான் வாங்க
வந்த வழிய பார்த்து போங்க
நாடோடி மன்னன் பாடல்

சிவராமன் : சரி கிளம்பறோம்.

சேதுபதி : தப்பா நெனச்சுகாதிங்க. அவனுக்கு எப்பவும் கிராமத்து பாட்ட பாடிதான் வழக்கம்.

சிவராமன் : ஓஹோ

சேதுபதி : உங்களுக்காக சினிமா பாட்ட பாட சொன்னேன். சொதப்பிட்டான்.

சேதுபதி : வைஜெயந்தி... வாம்மா.

வைஜெயந்தி : வந்துட்டேம்பா

சேதுபதி : இதா பொண்ணு

சிவராமன் : நாங்க இல்லேன்னு சொல்லலியே

சேதுபதி : தமாஷு

சிவராமன் : அய்யய்யோ!

சேதுபதி : இவ பொண்ணு மட்டுமில்ல.

சிவராமன் : பையனும் சேர்ந்ததா?

சேதுபதி : இல்லீங்க.

சிவராமன் : ம்..

சேதுபதி : என் ஒரு கண்ணு மாதிரி...

சிவராமன் : அப்ப உங்களோட இன்னொரு கண்ணு.

சேதுபதி : என்னோட மனைவி. ஆனா அவ இப்ப உயிரோட இல்ல.

சிவராமன் : அப்ப உங்களோட ஒரு கண்ணு outன்னு சொல்லுங்க.

சேதுபதி : எங்க ஊர்ல மேயர் மீனாட்சி நடந்து வர்றான்னா....!

சிவராமன் : என்ன சொன்னீங்க?

சேதுபதி : எம் பொண்டாட்டி பேரை சொன்னேன்.

சிவராமன் : அஹூம்...

சேதுபதி : அவளை எங்க ஊர்ல அப்படித்தான் கூப்பிடு வாங்க.

சிவராமன் : அப்ப அந்த காலத்து கே.ஆர். விஜயான்னு சொல்லுங்க.

சேதுபதி : ஆமா தமாஷு போங்க. அவளோட அம்மா யார் தெரியுமா.

சிவராமன் : களத்தூர் கண்ணம்மாவா.

சேதுபதி : கரெக்டா சொல்லிட்டிங்களே.

சிவராமன் : இதென்ன பெரிய விஷயம்? அவங்க அம்மா பேரென்ன பக்த மீராவா?

சேதுபதி : அடடா! ஞானதிருஷ்டில சொல்ற மாதிரி சொல்றிங்களே!

சிவராமன் : இதுக்கு எதுக்கு ஞானதிருஷ்டி? சீசனுக்கு ஏத்த மாதிரி பேரு வச்சிக்கறிங்க. ஒரே கலைக் குடும்பம்.

சேதுபதி : மாப்ள எம் பொண்ண உலகம் தெரியாம வளர்த் துட்டேன்.

சிவராமன் : அதுக்கு நா என்னங்க பண்ண முடியும்! வேணுன்னாக்க இதயம் மணியனோட ஒரு பயண கட்டுரையை படிக்க சொல்லுங்க.



கோலி : சரி சரி இப்படி பேசிகிட்டே இருந்தா எப்படி? வைஜெயந்தி எல்லார் காலையும் வாரிவிடும்மா.

சிவராமன் : என்னது! காலை வாரிவிடனுமா? என்னய்யா சொல்ற?

கோலி : எல்லார் கால்லேயும் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கன்னு சொல்ல வந்தேன்.

சிவராமன் : (சிரித்துக் கொண்டே) சிம்பாலிக்கா சொல்ல வந்தியாக்கும். கோலி நீ உளர்றத நிறுத்தல கிறுக்கா வுட்டுருவேன் ஜாக்ரதை.

கல்யாணம் : உங்க பொண்ணுகிட்ட சில விஷயங்கள் கேட்கலாமா?

சேதுபதி : தாராளமா

கல்யாணம் : வைஜெயந்தி... அம்மா வைஜெயந்தி

சிவராமன் : பிச்சை கேட்கறியா? வந்த இடத்துல மானத்தை வாங்காத.

கல்யாணம் : நீ சும்மா இர்றா. வைஜெயந்தி உங்கிட்ட நான் சில கேள்விகள்லாம் கேக்கப் போறேன்.

சிவராமன் : இன்டர்வியுவா? பொண்ணு பார்க்க வந்தாலே ஆரம்பிச்சிடுவிங்களேப்பா.

கல்யாணம் : என்னையும் மத்தவங்க மாதிரி நெனைக்காதடா. நான் வித்யாசமா கேட்கப் போறேன்.

சிவராமன் : பார்த்து! பொண்ணு பயந்துடப் போவுது.

கல்யாணம் : உலகத்திலேயே பெரியது என்னம்மா

சிவராமன் : என்னம்மோ முருகன் ஔவையார்கிட்ட கேட்கற மாதிரி கேக்கறே? உலகத்திலேயே பெருசு பொம்பளைங்களோட... வாய்தான்.

வைஜெயந்தி : உலகத்திலேயே பெருசு அன்புதான்.

சிவராமன் : ஆ!

கல்யாணம் : உலகத்திலேயே சின்னது என்னம்மா?

வைஜெயந்தி : மத்தவங்க திறமையை பார்த்து பொறாமை படும் மனசு.

கல்யாணம் : வைஜெயந்தி இனிமே நீதான் எங்க வீட்டு மருமகள்.

சிவராமன் : இந்த ரெண்டு கேள்விக்கு பதில் சொல்லிட்டா ஒரு வீட்டுக்கு மருமகளா ஆயிடலாமா. எல்லாரும் கேட்டுக்கங்கப்பா.

கல்யாணம் : இன்னும் ஒரு முக்யமான கேள்வி.

சிவராமன் : இணை கேள்வியா... இல்ல துணை கேள்வியா?

கல்யாணம் : காதலிச்சு கல்யாணம் பண்றதுக்கும், பெரிய வங்க பார்த்து பண்ற கல்யாணத்துக்கும் என்ன வித்யாசம்?

சிவராமன் : அது ரிஜிஸ்தர் ஆபிஸ்ல பண்ணுவாங்க... இது சத்திரத்துல பண்ணுவாங்க. காதல் கல்யாணத்த பத்தி நீ பேசறியா?

கல்யாணம் : என்னடா சொன்ன? என்னை பார்த்து? என்ன வார்த்தைடா சொல்லிட்ட?

(குழந்தை அழும் சத்தம்)

சிவராமன் : அண்ணா, அண்ணா நிறுத்துண்ணா... நிறுத்து

சேதுபதி : இவருக்கு என்ன ஆச்சு.

சிவராமன் : இதுக்கு பின்னாடி ஒரு சோகக்கதையே இருக்கு.



சேதுபதி : இவரும் என்ன மாதிரிதானா...

சிவராமன் : ஏன்? நீங்களும் இதே மாதிரி கேஸ்தானா

சேதுபதி : தம்பி தயவு செய்து கோர்ட்டு கேஸுன்னு என் முன்னாடி சொல்லாதிங்க.

சிவராமன் : ஏன்! கேஸுன்னு சொன்னா என்ன?

சேதுபதி : தம்பி அதுக்கு பின்னாடி ஒரு சோகக் கதையே இருக்கு.

(குழந்தை அழும் சத்தம்)

சிவராமன் : போச்சுறா!

கோலி : நிறுத்துங்க! நிறுத்துங்க.

சிவராமன் : என்னது இது; ரெண்டு கேஸும். சரி சரி ரெண்டு பார்ட்டியும் சம்பந்தி ஆச்சுன்னா....

வைஜெயந்தி : எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்ளேயிருந்து....

சிவராமன் : ஆர்லிக்ஸ்தான் குடிப்பிங்களா...

வைஜெயந்தி : இல்ல...

சிவராமன் : போன்வீட்டாவா...

வைஜெயந்தி : அய்யோ இதையேதான் சொல்லிட்டிருக்காரு.

சிவராமன் : உங்கப்பாவாவது நினைவு தெரிஞ்ச நாள்ள இருந்து சொல்லிட்டிருக்காரு. எங்கண்ணன் அவருக்கு நினைவு தெளிஞ்ச நாள்ளேயிருந்து இதையேதான் சொல்லிட்டிருக்காரு.

(பொன்னம்பலம் பாடுதல்)
என் சோக கதைய கேளு தாய்க்குலமே.

சிவராமன் : போதும்பா. இப்பத்தான் சிச்சுவேஷனுக்கு ஏத்த மாதிரி பாடியிருக்கான் இவன்.

சேதுபதி : தம்பி, வீட்டுக்கு வீடு வாசப்படி மாதிரி எங்க ரெண்டு பேருக்கும் ஒரு சோகக் கதை இருக்கு. எனக்கு இருக்கறது ஒரே பொண்ணு... ஏதோ பொண்ணு வைக்கிற இடத்துல பூவை வைக்கிற மாதிரி.

சிவராமன் : அப்ப உங்க பொண்ணை தரமாட்டிங்களா? பூவுக்குத்தான் நான் தாலி கட்டணுமா!

சேதுபதி : என்ன இப்படி சொல்லிட்டிங்க? உங்க முடிவ நீங்கதான் சொல்லணும்.

சிவராமன் : அதான் எங்கண்ணன்தான் சொல்லிட்டாரே. யாரு தடுத்தாலும் வைஜெயந்தி IPS தான் எங்க வீட்டு மருமகள்னு.

கல்யாணம் : சீக்கிரம் ஒரு நல்ல நாளா பார்த்து முகூர்த்தத்த வச்சிருவோம்

சிவராமன் : ஆனா இந்த வரதட்சணை. அது இது... இதெல்லாம் எனக்கு புடிக்காது... ஏன்னா என்னை பொறுத்த வரைக்கும் வரதட்சணை கொடுக்கறதும் பாவம்... வாங்கறதும் பாவம்... தேவையில்லாத பார்மாலிட்டிஸ்லாம் இல்லாம சிம்பிளா கல்யாணத்த பண்ணுங்க.

கோலி : அப்புறம் என்ன? சீக்கிரம் கை கழுவிட வேண்டியதுதான்.

சேதுபதி : என்னய்யா சொல்ற?.

கோலி : சொஜ்ஜி பஜ்ஜி சாப்பிட்டுட்டு கை கழுவிட வேண்டியதுதான்னு சிம்பாலிக்கா சொன்னம்பா.

சேதுபதி : அபத்தமா பேசாதய்யா...

கல்யாணம் : அப்ப நாங்க வர்றோம்... நல்ல முகூர்த்த நாள பார்த்து சொல்லி அனுப்புங்க.



சிவராமன் : வைஜெயந்தி நான் வரட்டுமா...

வைஜெயந்தி : வாங்க...

சேதுபதி : ஆண்டவன் புண்ணியத்துல இந்த இடம் முடிவாயிடுச்சு. அப்புறம் ஒரு முக்யமான விஷயம் எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பொண்ணு.

கோலி : இதையே அடிக்கடி சொல்லாதிங்க. எனக்கே உங்க மேலே டவுட்டு வரது.

சேதுபதி : சும்மா இருய்யா... எம் பொண்ணுக்கு நல்ல படியா கல்யாணம் செய்து கொடுக்க... அதோட எம் பொண்ணு பேர்ல Fixed Deposit ஒரு லட்ச ரூபாய் போட்டு வச்சிருக்கேன். அதையும் மாப்ளகிட்ட கொடுத்துட்டு... நா காசி ராமேஸ்வரம் போயிடல்லான்னு முடிவு பண்ணியிருக்கேன்.

கோலி : எங்கிட்ட சொல்லிட்டிங்கள்ள! நான் பாத்துக் கறேன். சீக்கிரம் வைஜெயந்தி கழுத்துல கயிறு மாட்டி தொங்கவிட வேண்டியதுதான்.

சேதுபதி : என்னய்யா சொல்ற?

கோலி : கழுத்துல தாலி கயிறு தொங்கும்னு சிம்பாலிக்கா சொல்றேன்.

சேதுபதி : போய்யா... அம்மா வைஜெயந்தி மாப்ள எப்படி!

வைஜெயந்தி : சூப்பர் பிகர்
ஸ்டைலு ஸ்டைலுதான்
இது சூப்பர் ஸ்டைலுதான்
ஓ ஸ்டைலுகேத்த மயிலு நானுதான்.

– திரை –

## காட்சி – 4

இடம் — சிங்காரி வீடு
பாத்திரங்கள் — காஞ்சனா, சிங்காரி, கிருஷ்ணன்

சிங்காரி : யாரும்மா நீ!

காஞ்சனா : என்ன உனக்கு தெரியல? நான்தான் காஞ்சனா... டைவர்ஸ் காஞ்சனா.

சிங்காரி : ஓ... யாரு! டாப் காஞ்சனாவா? அடையாளமே தெரியலையே!

காஞ்சனா : சின்ன வயசுல எல்லாம் என்னை கிண்டலா டாப் காஞ்சனா, காஞ்சனான்னு சொல்லுவீங்க, இன்னிக்கு நான் நெஜமாலுமே டாப் காஞ்சனா

சிங்காரி : Housing போர்ட்ல 5வது மாடியில இருந்த. ஏன், 5வது மாடியிலேந்து டைவ் அடிச்சு முதல் மாடிக்கு குடி வந்துட்டியா... அதான் உன்னை எல்லாரும் அப்படி கூப்பிட்டாங்க.

காஞ்சனா : அன்னிக்கு டாப் காஞ்சனா... இன்னிக்கு டைவர்ஸ் காஞ்சனா... ஏய்... சின்ன வயசுல இருந்த குறும்பு அப்படியே இருக்கு உனக்கு... அதுசரி என் கதை அப்படியே இருக்கட்டும்... நீ எப்படி இருக்கே? உன் மாமன் எப்படி இருக்கு?

சிங்காரி : எப்பவும் போலத்தான் எம்மேல உசிரா இருக்குது. நானும் அதுமேல உசிரா இருக்கேன்.





காஞ்சனா : ஸ்கூல்ல படிக்கும்போது சிலேட்ல பாடத்துக்கு பதிலா உன் மாமன் பேரை எழுதிட்டு டீச்சர் கிட்ட அடி வாங்குவியே ஞாபகம் இருக்கா.

சிங்காரி : அப்ப ஸ்லேட்ல எழுதுனேன். இப்ப அப்பளத்தில எழுதுறேன்.

காஞ்சனா : அப்பளத்திலேயா?

சிங்காரி : என் மாமன என்ன நெனச்சே, அவுரு ஜென்டில் மேன் தெரியுமா?

காஞ்சனா : என்னமோ மா, நீதான் மாமா மாமான்னு உசிரா இருக்க, அது சின்ன வயசுல அமுல் பேபி மாதிரி இருந்துச்சு, எப்பவும் கில்லி தாண்டும் கையும் அலையும்.

சிங்காரி : இங்க பாரு என் முன்னாடி என் மாமன பத்தி தப்பா பேசாதே, இன்னிக்கு லெவல்ல என் மாமன பத்தி உனக்கு என்னா தெரியும். இன்னிக்கு லெவல்ல எம் மாமன் லெவல் என்ன தெரியுமா.

என்னை தெரியுமா
நான் சிரித்து பழகி ரசிக்கும்
ரசிகன் என்னை தெரியுமா
(பாடல் ஒலிக்கிறது)

சிங்காரி : அ... என் மாமன் வந்துச்சி. மாமு

கிருஷ்ணன் : அ... சிங்காரி

காஞ்சனா : அட... கிருஷ்ணனா! நாடோடி மன்னன் MGR மாதிரி வளர்ந்திருக்குது.

கிருஷ்ணன் : அது அப்ப, இப்ப குடியிருந்த கோயில் MGR மாதிரின்னு சொல்லுங்க, இல்ல பாட்சா ரஜினி மாதிரினு சொல்லுங்க.

சிங்காரி : என் மாமுவ என்னமோ மாதிரி சொன்னியே, ராஜா மாதிரி இருக்குது பாரு...

கிருஷ்ணன் : நான் எடுக்கறதும் யாருக்கும் தெரியாது, அத கொடுக்கறதும் யாருக்கும் தெரியாது.

சிங்காரி : மாமா இது யாரு தெரியுதா? என் சின்ன வயது பிரண்டு காஞ்சனா.

கிருஷ்ணன் : அடிக்கடி சொல்லுவிய... அந்த கால்னா பார்ட்டி இதுதானா.

காஞ்சனா : கால்னா பார்ட்டியா! அப்படின்னா?

சிங்காரி : அது சின்ன வயசுல எல்லா பசங்க பின்னாடியும் சுத்துவேயில்ல... அதான்... சொல்லுது.

காஞ்சனா : ஏய் மிஸ்டர்

கிருஷ்ணன் : அக்காம்...

காஞ்சனா : அதெல்லாம் அந்தக் காலம்

கிருஷ்ணன் : இந்த பீட்டர் பேச்செல்லாம் எங்கிட்ட வச்சுகா தம்மா.

காஞ்சனா : பீட்டரா!

கிருஷ்ணன் : அக்காம்...

காஞ்சனா : என்ன உளர்ற?

சிங்காரி : கோவிச்சுக்காதே... நீ இங்கிலிஸ்ல உளர்ன இல்ல; அதான் அப்படி சொல்லுது.

கிருஷ்ணன் : ரொம்ப தொகுர்றியா.

காஞ்சனா : என்ன தொகுர்றன்னா! அப்படின்னா?

கிருஷ்ணன் : அப்படி என்ன பெரிய ஆளாயிட்ட நீ...

காஞ்சனா : டைவர்ஸ் புகழ் காஞ்சனா வரான்னா கோர்ட்டே அலறும் தெரியுமா?



கிருஷ்ணன் : T.V.புகழ் மாதிரி, டைவர்ஸ் புகழா

காஞ்சனா : இதுவரைக்கும் 1000 பேருக்கு டைவர்ஸ் வாங்கி கொடுத்து சாதனை புரிஞ்சிருக்கேன்.

கிருஷ்ணன் : நமக்கே அவல் கொடுக்கறியே... நீயே 5ம் கிளாஸ் வரைக்கும்தான் படிச்சிருக்கற.

காஞ்சனா : அதனால என்ன, நான் என்ன சிங்காரி மாதிரி மாமன், மாமன்னு சுத்திகிட்டா இருந்தேன். அப்படி இப்படின்னு எப்படியோ ஒரு 5 வருஷம் கலெக்டரா இருந்தேன். 5 வருஷம் டாக்டரா இருந்தேன். 5 வருஷமா வக்கிலா இருக்கேன்.

கிருஷ்ணன் : ஐஞ்சஞ்சி வருஷம் கலெக்டரா, டாக்டரா இருந்தியா? என்னமோ ஓட்டு வாங்கி MLA ஆன மாதிரியில்ல பேசற நீ...

காஞ்சனா : துட்டு குடுத்து வாங்கிட்டேன். உலகத்துலதான் பணம் இருந்தா எதையும் சாதிக்கலாமே.

கிருஷ்ணன் : அப்படி 5 வருஷம் மந்திரியா ஆகவேண்டியது தானே.

காஞ்சனா : ஆகலாம். ஆனா இப்பதான் எந்த ஆட்சியும் ஐந்து வருஷம் வுட்டு வைக்கிறதில்லையே.

சிங்காரி : ஆமா, காஞ்சனா உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா?

காஞ்சனா : நான் தான்....

கிருஷ்ணன் : ஏன் 5 வருஷம் யாருக்காவது பொண்டாட்டியா இருக்கணுமா?

காஞ்சனா : மிஸ்டர்!!!

கிருஷ்ணன் : நான் என்னமோ நெனச்சேன் என்னமோ பேசிட்டேன்.

காஞ்சனா : சிங்காரி உன் மாமா லேசுபட்டவன் இல்ல.

கிருஷ்ணன் : நான் சூ பட்டவன். லேசுபட்டவன் இல்லன்னியே! அதான் சூ பட்டவன்னு சொன்னன்.

காஞ்சனா : நான் ஒரு 5 வருஷம் உங்களுக்கு உதவியா இருக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கிறேன்.

கிருஷ்ணன் : சமுக சேவகியா! டெய்லி ரோடு போடுவியா?

காஞ்சனா : அகில இந்திய பாதயாத்திரை போகலாம்னு இருக்கேன்.

கிருஷ்ணன் : ஓ... இந்தியா பூரா கீளின் பண்ணலாம்னு இருக்கீங்களா.

காஞ்சனா : கங்கையையும் காவிரியையும் இணைக்கறதுக்காக பாதயாத்திரை போவ போறேன்

கிருஷ்ணன் : நடக்காத விஷயத்துக்கு நீ ஏம்மா நடக்கறே.

காஞ்சனா : ஒரு பொம்பளை நினைச்சா எதை வேணாலும் செஞ்சு முடிப்பா.

கிருஷ்ணன் : அல்லாம் இந்த டயலாக்கே சொல்லுங்க. இங்க என்னடான்னா புருஷன் பொஞ்சாதிக்கு டைவர்ஸ் வாங்கி கொடுத்து பிரிக்கற! கங்கையையும் காவிரியையும் சேர்க்க போறியா... உம்! கவர்மெண்டாலேயே முடியல... நீ பாத யாத்திரை போயி வேவ போவதாக்கும்

காஞ்சனா : வேவுமா என்னப்பா சொல்ற?

கிருஷ்ணன் : இன்னா! நீ தமிழே புரிஞ்சுக்க முடியலை... ALL INDIA பாத யாத்திரை போவபோறேன்னு சொல்ற! நீ பாத யாத்திரை போனா நிறை வேறிடுமா?



காஞ்சனா : பாத யாத்திரை போயும் நிறைவேறலன்னா, ரத யாத்திரை போவேன், ரயில் யாத்திரை போவேன், Flight யாத்திரை போவேன். நம்ம நாட்டுல யாத்திரைக்கா பஞ்சம்?

கிருஷ்ணன் : நம்ம நாட்டுல அரிசி பஞ்சம் வரும், தண்ணி பஞ்சம் வரும், துணி பஞ்சம் வரும். ஆனா பேராட்டத்துக்கு மட்டும் பஞ்சமே வராது.

காஞ்சனா : கிருஷ்ணா நீயும் எங்கூட எனக்கு துணையா ஏதாவது சமுக சேவை செய்யேன்.

கிருஷ்ணன் : ஹூம்... நமக்கு இந்த ஜிகினா வேலைலாம் வேணாம்மா.

காஞ்சனா : ஜிகினாவா..

கிருஷ்ணன் : அக்காம்... Film காட்றது.

காஞ்சனா : பிலிமா!

கிருஷ்ணன் : ஆமா! எல்லாத்துக்கும் அர்த்தம் சொல்லிகினு இருந்தா டைம் பத்தாது. நம்ம பாஷைக்கு டிக்ஷனரி போட்டுருக்கேன்... அதை புரட்டிப்பார்.

காஞ்சனா : மனுஷனா பொறந்தா ஏதாவது சாதிக்கணும்.

கிருஷ்ணன் : உம்...

காஞ்சனா : இப்படி உருப்படி இல்லாம இருந்தா எதை சாதிக்க முடியும்?

சிங்காரி : இத பாரு... எம் மாமன பத்தி ராங்கா பேசாதே... அப்புறம் நம்ம Friendship ராங்கா போயிடும்...

காஞ்சனா : என்ன இப்படி புரியாம பேசற? இப்படியே இருந்திங்கன்னா வாழ்க்கை பூராவும் இப்படி குடிசையிலதான் வாழணும்.

கிருஷ்ணன் : என்னம்மா கிராஸ்கட் பண்றியா? என் சிங்காரிய எப்படி வச்சிக்கணும்னு எனக்கு தெரியும்... அரண்மனை மாதிரி ஒரு வூடு கட்டி... மகாராணி மாதிரி என் சிங்காரிய நான் வச்சிப்பேன்.

காஞ்சனா : ஆம்பளைங்கள்ளாம் எப்பவும் இப்படித்தான் பேசுவாங்க. அப்புறம் எப்படி வருவீங்கன்னு தெரியாது?

கிருஷ்ணன் : இத பாரும்மா... மத்தவங்க மாதிரி என்னை நெனைக்காதே... நான் என்னை மறந்தாலும் என் சிங்காரிய மறக்க மாட்டேன். உங்கிட்டே பேசிக்கினே இருந்தா நம்ம தொழில் அம்பேல்தான். அப்பால... மாமன்கிட்ட யார் பதில் சொல்றது. நான் ரூட்ல போகணும். ஜூட் உட்டுக்கிறேன்.

காஞ்சனா : ரூட்ல ஜூட்டா... என்ன தமிழோ!

சிங்காரி : என் மவராசன் நீ நல்லாயிருக்கணும்.

காஞ்சனா : என்னமோமா நீ மட்டும்தான் சொல்ற..

சிங்காரி : நான் மட்டுமா சொல்றன். அங்க பாரு ஊரே சொல்லுது

(பாடல் ஒலிக்கிறது)

நீங்க நல்லாயிருக்கணும்னு
நாடு முன்னேற
இந்த நாட்டிலுள்ள
ஏழைகளின் வாழ்வு
முன்னேற...

– திரை –

## காட்சி – 5

| | |
|---|---|
| இடம் | வைஜெயந்தி வீடு |
| பாத்திரங்கள் | வைஜெயந்தி, கிருஷ்ணன் |

கிருஷ்ணன் : அய்யய்யோ! படா பேஜார போச்சு... மாமன் தொல்லை தாங்க முடியல ஒரு பக்கம், வளர்த்த மாமா; இன்னொரு பக்கம் போலீஸ் மாமா... சொந்த வூட்ல அடைக்கலம் போவேண்டித் தானா... அகதிங்க மாதிரி ஆயிபோச்சே... துறந்து வுட்ற வேண்டியது தான்.

வைஜெயந்தி : ஓ நீங்களா... நீங்க எப்படி இப்படி தீடீர்னு

கிருஷ்ணன் : அடுத்த தபா லெட்டர் போட்டு வரேன். என்னம்மா நீ. மாமா துரத்தினு வந்தாரு தப்பிக்க உள்ள பூந்துட்டன்.

வைஜெயந்தி : மாமாவா? யார் மாமா?

கிருஷ்ணன் : என் தாய் மாமா...

வைஜெயந்தி : உங்க மாமா ஏன் உங்கள துரத்தறாரு?

கிருஷ்ணன் : ஆமா! புட்பால் வெளையாடறோம்... அவரு துரத்திகினே வருவாரு, நான் ஒளிஞ்சிப்பேன். கம்முனு கிட...

வைஜெயந்தி : சே போயும் போயும் இதபோயி வெளையாட றீங்களா. சின்ன குழந்தை மாதிரி! உங்க வயசுக்கு அட்லீஸ்ட் போலீஸ் திருடன் விளை யாட்டு விளையாடினா நல்லா இருக்கும்.

கிருஷ்ணன் : என்னம்மா கம்பி எண்ண வுடலான்னு பார்க்கறியா நீ...

வைஜெயந்தி : என்ன நீங்க வந்ததுலேர்ந்து பார்க்கறேன் ஒரு மாதிரியா பேசறிங்க.

கிருஷ்ணன் : உம் நீதான் ஒரு மாதிரி பேசற... உன் வூடு தானே இது.

வைஜெயந்தி : ஊடா!

கிருஷ்ணன் : மென்டல் ஆஸ்பிடலா, வூடான்னு கேட்டேன்.

வைஜெயந்தி : தெரியாது மாதிரி கேளுங்க. என்ன பார்க்கத் தானே வந்திங்க.

கிருஷ்ணன் : மாமன் செய்யற தப்புக்கெல்லாம் எம்மேல கேஸ் போடறாங்க. நீ வேற சொல்லி மாட்டி வுட்டுராதே, நான் வரேன்.

வைஜெயந்தி : என்ன நீங்க வந்ததும் வராததுமா போறேன்றிங்க.

கிருஷ்ணன் : இப்ப என்ன பண்ணனும்ற நீ?

வைஜெயந்தி : ஒரு டம்ளர் காபியாவது குடிச்சுட்டு போகக் கூடாதா.

கிருஷ்ணன் : என்னது காபியால அடக்கலமும் கொடுத்து காபியும் தர்ரேன்ற, நாஷ்டா கிடையாதா.

வைஜெயந்தி : நாஷ்டான்னா!?

கிருஷ்ணன் : அதாம்மா டிபனு...

வைஜெயந்தி : கொஞ்சம் வெயிட் பண்ணிங்கன்னா செஞ்சு தரேன்.

கிருஷ்ணன் : வெயிட்டிங்கா? நான் ஏற்கனவே லேட்டு. லேட்டா போனா மாமன் கத்தும்.

வைஜெயந்தி : எந்த மாமன்?



கிருஷ்ணன் : அட! இது வேற மாமா...

வைஜெயந்தி : உங்களுக்கு எத்தனை மாமா?

கிருஷ்ணன் : அக்காம். காக்கி சட்டை போட்டவன்லாம் என் மாமன்தான் பேதுமா.

வைஜெயந்தி : அப்படியா? நேற்றுகூட உன் மாமாகிட்ட பேசிட்டிருந்தேனே.

கிருஷ்ணன் : என் மாமன் கைல நீ பேசிக்கினு இருந்தியா?

வைஜெயந்தி : பக்கத்தெரு பீடி பாக்டரியிலே செக்யுரிட்டியா இருக்கறாரே. அந்த மாமாகிட்ட பேசிட்டிருந்தேன்.

கிருஷ்ணன் : அ...

வைஜெயந்தி : அவரு இந்தியில ரொம்ப நல்லா பேசறாரு. ஏங்க உங்க மாமா யாராவது ஆட்டோ ஓட்டுறாங்களா?

கிருஷ்ணன் : ஆட்டோ ஓட்டுறாங்க, டாக்ஸி ஓட்டுறாங்க போஸ்ட்மேனா இருக்காங்க (மெல்லிய சிரிப்பு) காஸ் சிலிண்டர் சப்ளை செய்றாங்க.

வைஜெயந்தி : அப்பா! இவ்வளவு மாமா உங்களுக்கு!

கிருஷ்ணன் : இன்னாமா படா பேஜரா போச்சு! காக்கி சட்டை போட்டவன்லாம் என் மாமான்னு சொன்னேன். காபி தரேன்னு சொல்லி நின்னு கினு கீரே.

வைஜெயந்தி : சாரிங்க. உங்க மாமாவ பத்தி பேசனதுலே மறந்து போயிட்டேன்.

கிருஷ்ணன் : (தனக்குத் தானே) சீக்கிரம் போம்மா! சரியான கீழ்பாக்கம் கேஸு. சீக்கிரம் தப்பிச்சு போயிடனும்.

வைஜெயந்தி : இந்தாங்க காபி...

கிருஷ்ணன் : அம். நான் வருவேன்னு சொல்லி ரெடியா வச்சிருந்தா மாதிரி அப்படியே கொண்டாந்து கொடுக்கறியே.

வைஜெயந்தி : நீங்க வருவிங்கன்னு எனக்கு தெரியுமே... மாமா சொன்னாங்க.

கிருஷ்ணன் : அம்...! மாமாவா? எந்த ஸ்டேசன் மாமா?

வைஜெயந்தி : Station மாமா இல்ல, பக்கத்து வீட்டு மாமா... அவர், பொண்ணை பொண்ணு பார்த்துட்டு போனதுக்கப்புறம், அவர் மாப்ள கல்யாணத்துக்கு முன்னாடி அடிக்கடி வருவாராம். நேற்று நீங்க பொண்ணு பார்க்க வந்தீங்கள்ள...

கிருஷ்ணன் : ஆ...! நான் பொண்ணு பார்க்க வந்தேனா? சத்தியமா இது ஏதோ டைப்புதான்.

வைஜெயந்தி : காபி நல்லாயிருக்கா.

கிருஷ்ணன் : ம்! நாயர் கடை டீக்கு இது பெட்டர்.

வைஜெயந்தி : நாயர் கடை டீயா

கிருஷ்ணன் : ஆம்

வைஜெயந்தி : ஏன் உங்க வீட்ல காபி போட மாட்டாங்களா

கிருஷ்ணன் : எங்க வீட்ல டி... காபி எல்லாம் ஓட்டல்தான்.

வைஜெயந்தி : கொஞ்சநாள் பொறுத்துக்குங்க, நான் உங்க வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம் எல்லாம் சரியாயிடும்.

கிருஷ்ணன் : உம்! வூட்டுக்கு வறியா, எதுக்கு?

வைஜெயந்தி : என்னங்க, ஒண்ணுமே தெரியாத மாதிரி பேசறீங்க! நேற்று பொண்ணு பார்க்க வரும்போது யாருக்கும் தெரியாம சைட் அடிச்சதகூட மறந்துட்டிங்களே!



கிருஷ்ணன் : ம், என்னாடா கிறுக்கல் வுடுது? என்னம்மா சொல்ற நீ.

வைஜெயந்தி : சே! ஆம்பளைங்களே இப்படித்தான், ரொம்ப மோசம்.

கிருஷ்ணன் : எத்த வச்சும்மா அப்படி சொல்ற? இன்னாத்துக் கும்மா இப்படி சொல்ற? ஆவுன்னா ஆம்பிளைங்க மோசம்னு சொல்லிட வேண்டியதா? நாங்க சொல்றமா, பொம்பளைங்க மோசம்னு. மோச மான பொம்பளைங்கள பார்த்தா கூட டக்கர் பிகர்னு தான் சொல்லுவோம்.

வைஜெயந்தி : அப்ப எங்களுக்கு அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு இல்லன்னு சொல்றீங்களா?

கிருஷ்ணன் : அது பழமொழி, புதுமொழி இது வேற... பொம்பளைக்கு நாலு ஐதான் கீது...

வைஜெயந்தி : ம். இல்லியே எனக்கு இரண்டு கண்தானே கீது.

கிருஷ்ணன் : அய்யே! நான் நான் சொல்றது வேற அழுகை. அழுகை, பொறாமை, வாய்மை அதான் இன்னொரு மை கீதே... உண்மை.

வைஜெயந்தி : ஆனா ஒண்ணு. உங்க போட்டோவ எங்கிட்ட கொடுத்தப்பவே நீங்கதான் என் புருஷன்னு முடிவு பண்ணிட்டேன்.

கிருஷ்ணன் : எம் போட்டாவா? எந்த Stationல கொடுத்தாங்க?

வைஜெயந்தி : என்ன நீங்க எதுக்கெடுத்தாலும் ஸ்டேசன்னு சொல்றீங்க? மாமாதான் கொடுத்தாரு.

கிருஷ்ணன் : அய்யய்யோ! தலையே பிச்சிக்கலாம் போல கீதே... அய்யய்யோ இங்க எல்லாமே மாமா தானா... எந்த மாமா இது?

வைஜெயந்தி : புரோக்கர் மாமா

கிருஷ்ணன் : புரோக்கர் மாமாவா? எந்த ஏரியா

வைஜெயந்தி : தெரியாத மாதிரி கேக்குறிங்களா? அரும்பாக்கம்.

கிருஷ்ணன் : கோடம்பாக்கம்னு நினைச்சேன்.

வைஜெயந்தி : ஆமா, என்னை பத்தி நீங்க என்ன நெனைக்கிறீங்க அம்?

கிருஷ்ணன் : உன்னை பத்தி நெனைக்கவே பயமா கீது...

வைஜெயந்தி : அப்ப உங்க மேல வச்ச ஆசை?

கிருஷ்ணன் : பேராசை.

வைஜெயந்தி : அய்யோ. எனக்கு தலையை சுத்தற மாதிரி இருக்கு.

கிருஷ்ணன் : நான் காரணம் இல்ல.

என்னை விட்டு ஓடி போகமுடியுமா
இனி முடியுமா
நாம் இருவர் அல்ல
ஒருவர் இனி தெரியுமா
(பாடல் ஒலிக்கிறது.)

– திரை –

## காட்சி – 6

இடம் : கிருஷ்ணன் வீடு
பாத்திரங்கள் : போட் நாராயணன், கிருஷ்ணன், கோலீஸ்வரன்

: என்னடா இன்னும் அநத் கிருஷ்ணன் பயல காணும்.

: ஆமா அவன் இன்னும் எந்த எடத்துல போலீ ஸோட ஓடிபிடிச்சு விளையாடினுக்கிறானோ...

: ஊர்ல ஜனங்ககிட்ட மாமுல வாங்கற நம்மள தாதான்னு சொல்றாங்க... ஆனா, நம்மள மாதிரி தாதாகிட்ட மாமுல் வாங்கறாங்கள போலீஸு! அவங்கள என்னன்னு சொல்றது?

கிருஷ்ணன் : அது தாதாதி தாதா

சிங்காரம் : அட வாடா கிருஷ்ணா உன்னை பத்திதான் பேசிக்கினுகிறோம்..

கிருஷ்ணன் : ம். நான் போலீஸுக்காரங்ககிட்ட ஓடி ஓடியே பாதி ஆயுசு போயிடும்போல கீது... செய்யற தப்பெல்லாம் நீ... ஓட வேண்டியது நானா கீது.

சிங்காரம் : தொழில்ல இதெல்லாம் சகஜம்பா.

கிருஷ்ணன் : ம்

சிங்காரம் : எம் வருங்கால வாரிசா உன்னை உருவாக்கிட்டு இருக்கேன்.

கிருஷ்ணன் : பெரிய சமஸ்தானத்து ராஜா நீ! அதுக்கு என்னை எதுக்குதான் வாரிசு உருவாக்குறதுன்னு வெவஸ்தையே இல்லாத போச்சு.

சிங்காரம் : சரி சரி நம்ம கலெக்ஷன எடு.

கிருஷ்ணன் : என்னமோ வூட்டு வாடகை கலெக்ஷன் பண்ற மாதிரி இல்ல கேக்கற நீ... இந்த இது கிண்டி, இது கோடம்பாக்கம், இது கோயம்பேடு பர்ஸு ஆம். டேய் போட்டு

போட்டு : அண்ணன்

சிங்காரம் : போயி சரக்கு எடுத்துட்டு வாடா. சாயந்திர நேரம் ஆவுது இல்ல.. சாயங்காலத்துல ஜல்சாவா இருக்கணும்

கிருஷ்ணன் : சாய்ங்காலம் வரைக்கும் கஷ்டப்படறது நானு. சாயங்காலத்து மேலே ஜல்சாவா? கிழவா! என்னா நீ.

சிங்காரம் : ஏய் கிருஷ்ணா! உன்னை தோள்ளயும், மார்லயும் போட்டு வளர்த்தவன் நானு. என்ன பார்த்து என்ன வார்த்தைடா சொல்லிட்ட? நான் உனக்கு வெறும் பாலு ஊத்தி வளர்க்கலடா.

கிருஷ்ணன் : நா இன்னா பாம்பா பால் ஊத்தி வளர்க்க! என்னது?

சிங்காரம் : என் வேர்வையை சிந்தி வளர்த்தேன்டா...

கிருஷ்ணன் : ஆ வயசாயிடுச்சின்னா எல்லாரும் இதே டயலாக்க வுட்டுருவீங்களா.

சிங்காரம் : வூட்டுக்கு முன்னாடி போலிஸ் போவும்னு நெனச்சி வளர்ப்பாங்க.

கிருஷ்ணன் : இப்ப என் பின்னாடி இல்ல போலிஸ் வருது.



சிங்காரம் : ம் வளர்த்த கடா வயித்துல பாயும்னு சும்மாவா சொன்னாங்க.

கிருஷ்ணன் : வளர்த்த கடா வயித்துல பாயும். அப்பால அல்சர் வரும். ஆ... உத்திகின மாதிரியே பேசறியே நீ...

சிங்காரம் : என்னுடைய வரலாறு தெரியுமாடா உனக்கு. 5 வயசிலேயே ஜெயில் கம்பிய எண்ணவன்டா இந்த தியாகி சிங்காரம்.

கிருஷ்ணன் : பிஞ்சுலய பழுத்துட்ட. அவனவன் ஐஞ்சு வயசுல ஸ்கூலுக்கு போய் 5 வரைக்கும் எண்ணு வான். நீ ஜெயிலுக்கு போய் கத்துக்கனே.

சிங்காரம் : என்னுடைய 10வது வயசுல வேதாரண்யத்துல...

கிருஷ்ணன் : காந்தி கூட சேர்ந்து உப்பு காய்ச்சினியா?

சிங்காரம் : ஹூம். சாராயம் காய்ச்சுனேன். அதுவும் நாட்டு சரக்க தவிர எந்த சரக்கையும் கண்ணாலகூட பார்த்தது கிடையாது.

கிருஷ்ணன் : BE INDIAN BUY INDIANன்னு சொல்லு நீ.

சிங்காரம் : அந்த சரக்கையும் இன்னைய வரைக்கும் என் கையாலயே காய்ச்சி குடிக்கறேன்டா.

கிருஷ்ணன் : காந்தி கதர் துணியதான் தன் கையால நெய்து போட்டுப்பேன்னு சொன்னாரு. நீ சாராயத்தை சொல்ற...

சிங்காரம் : ஆ சாதிகள் இல்லயடி பாப்பான்னு... பாரதியார் சொன்ன வார்த்தைய மதிக்கறவன்டா நான். இதுவரைக்கும் என்னுடைய சர்வீஸ்ல பிட்பாக் கிட்லயும் சரி வுடு பூந்து கொள்ளையடிக்கறதுல யும் சரி. நான் ஜாதி வித்யாசமே பார்த்தது கிடையாது.

கிருஷ்ணன் : அக்கும்.. போன மாசம்கூட ஒரு இந்திகாரன் வுட்ல பூந்து கொள்ளையடிச்சியே மறந்துட்டியா நீ? பெரிய தேசிய ஒருமைப்பாடு! வுட்டா அளந்துகினே போறீங்களே.

சிங்காரம் : எனக்கு வயது 55 ஆவுது. (லேசாக இருமுதல்)

கிருஷ்ணன் : உம்...உம்...

சிங்காரம் : இந்த 55 வருஷத்துல 10 லட்சம் லிட்டர் சாராயம் காய்ச்சி இருக்கேன். 65 கள்ள கடத்தல் செஞ்சி இருக்கேன். 125 பேங்க்க கொள்ளை அடிச்சிருக்கேன்.

கிருஷ்ணன் : அப்பா... பெரிசு புள்ளி விவரம் கொடுக்குது பார்த்தியா! வுட்டா MP. MLAவா ஆவன்னு ஆசை படுது பாரு.

சிங்காரம் : ஆமா... எதுல வுட்டேன்.

கிருஷ்ணன் : ஆயா வடை சுட்டுக்கினே இருந்துதா காக்கா தூக்கினு போச்சாம். அதுல வுட்ட ரீல்தானே வுடுற! எதுல வுட்டா என்ன?

சிங்காரம் : கம்முனு கிட. பேசும்போது குறுக்காலே பேசக்கூடாது. கய்தே.

போட் : மாமு. போன வருஷம் தண்ணிதுரை மார்க்கெட்ல பைரவன துரத்தி துரத்தி அடிச்சே கொன்னமே அத மறந்துகினியே...

கிருஷ்ணன் : நீ கொலைதான் செய்யலேன்னு நெனச்சேன்... அதையும் செஞ்சிட்டியா.

சிங்காரம் : அட நீ வேறப்பா... பைரவங்கறது ஒரு நாயி... அதுக்கு வெறி புடிச்சு மார்க்கெட்ல நெறைய பேரை கடிச்சுடுச்சு அத அடிச்சே சொன்னேன்.





உம் என்ன செஞ்சி என்ன புண்ணியம். இவ்ளோ செஞ்சும் எனக்கு தியாகிங்கற பட்டம் தான் மிச்சம். இந்த நாடு எனக்கு என்ன செஞ்சிச்சு.

கிருஷ்ணன் : உன்னை வெளியில நடமாட வுட்டுக்குதே. அதுவே பெரிய விஷயம். செக்ஷன் வாரியா ஒரு தப்பு வுடாம எல்லாத்தையும் செஞ்சுக்கற நீ... பத்மஸ்ரீ பட்டமா கொடுக்க முடியும்.

சிங்காரம் : ஆ. பட்டம்கிட்டம்லாம் யாருக்கு வேணுன்டா கய்தே... ஏதோ நான் மண்டைய போடற வரைக்கும் நாட்டு சரக்கை டெய்லி... வேணான்டா ஒரு நாள் விட்டு ஒரு நாள் கொடுத்தா போதாது?

கிருஷ்ணன் : உய்! இது என்ன Corporation தண்ணின்னு நெனச்சியா? ஒருநாள் விட்டு ஒரு நாள் விடுறதுக்கு.

சிங்காரம் : சரி மாசம் இவ்வளவுன்னு கொடுக்கட்டும்.

கிருஷ்ணன் : வுட்டா நீ பென்ஷன் கேப்ப போலகிதே. நீ என்ன சுதந்திரத்துக்கா ஜெயிலுக்கு போன? இதபார்! நான் ஏற்கனவே நொந்து போய் வந்துகிறேன்.

சிங்காரம் : நான் என்ன சொல்ல வர்றேன்னா.

கிருஷ்ணன் : நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். சீக்கிரம் போ, சரக்கு தீர்ந்துற போவுது. போ பேசாதே.

சிங்காரம் : தொ போறேன்... போறேன்.

போட் : கிருஷ்ணா என்னாச்சு நொந்து போயிட்டியா? நொந்து போற அளவுக்கு என்னபா நடந்தது.

கிருஷ்ணன் : ம் கலெக்ஷன் முடிச்சிகினு அரும்பாக்கம் வழியா வந்துகினே இருந்தனா... அந்த சமயம்

போலீஸ்காரங்ககிட்ட தப்பிக்க ஒரு வூட்ல பூந்துட்டேன். அங்க ஒரு பொண்ணுப்பா...

போட் : என்ன கேஸா?

கிருஷ்ணன் : நீ வேற... இது கேஸா, லூசான்னு புரியலை... என்ன பார்த்து, இன்னா மாமா திடீர்னு வந்துட்டிங்களான்னு கேட்டுது... நேற்று பொண்ணு பாக்க வந்திங்களே... அப்ப யாருக்கும் தெரியாம சைட் அடிச்சியே அப்படின்னு வேற கேட்குது நான் ஆடிட்டேன்.

போட் : அப்ப சந்தேகமேயில்ல. இது கேஸுதான்.

கிருஷ்ணன் : திடீர்னு உங்க மாமாவ பீடி பேக்டரில செக்யுரிட்டியா பார்த்தேன்னு சொல்லுதப்பா.

போட் : அப்ப அது லூசு.

கிருஷ்ணன் : நான் சொல்றது கேக்கற உனக்கே இவ்வளவு Confuce வருதே! கிட்டதட்ட அரை மணிநேரம் அதுக்கிட்ட அவஸ்தெபட்டுகிறேன் எப்படி யிருக்கும்? எதுக்கெடுத்தாலும் மாமாங்குது – யாரை? டாபர் மாமாவோ?

கோலி : டாபர் மாமாவ எதுவோ கோலின்னுதான் கூப்பிடுவே. இப்ப இன்னடான்னா டாபர் மாமான்றியா. உங்க கிண்டலுக்கு ஆளவே இல்லியா.

கிருஷ்ணன் : யோவ் யார்யா நீ- பஞ்சர் ஆன பந்து மாதிரி கீறே...

கோலி : என்னய்யா நீ என் அழகான பேரை வுட்டுட்டு என்னன்னமோ கூப்பிடுற

கிருஷ்ணன் : யோவ் மொதல்ல யாருன்னு சொல்லுய்யா நீ!



கோலி : என்னைப் பார்த்தா யாருன்னு கேக்குறியா நீ.. யாருன்னு கேக்குற. உனக்கு பொண்ண செட் அப் பண்ணவனே நான்தாண்டா?

கிருஷ்ணன் : யோவ்!

கோலி : உன் கல்யாணத்துக்கு என் தூரத்து சொந்தம் பொண்ணை பார்த்து கொடுத்தவன்னு சொல்ல வந்தேன். ஆமா என்ன நீ ஒரு மாதிரி பேசற...

கிருஷ்ணன் : ஒரு மாதிரி பேசறனா, நான்... என்ன இவனும் அதே மாதிரி கேள்வி கேட்கறான்? பொண்ணும் அதே கேள்விய கேட்குது ஒருவேளை மெண்டல் Hospitalலே இருந்து ஒரு கும்பல் தப்பிச்சினு வந்து கீது...

கோலி : இன்னது மெண்டல் ஆஸ்பிடலா... ஓ... அதுவா நானும் அங்கேயிருந்து தான் வர்றேன்.

கிருஷ்ணன் : நான் நெனச்சேன். நீ சொல்லிட்ட.

கோலி : என் பிரண்டோட பொண்ணு கொஞ்சம் அச்சு பிச்சு. அது சரியா போகணும்றதுக்கு என் திறமையால ஒரு பையனை கொடுத்தேன்.

கிருஷ்ணன் : என்னய்யா சொல்ற நீ? அ...!

கோலி : கல்யாணம் செஞ்சா சரியா போயிடும்னு ஒரு பையனை பார்த்து கொடுத்தேன்னு சிம்பாலிக்கா சொன்னேன்.

கிருஷ்ணன் : சிம்பாலிக்கா?

கோலி : இப்ப என்னடான்னா வீட்ல குடும்பம் நடத்த வேண்டியவங்க மெண்டல் ஆஸ்பிடல்ல குடும்பம் நடத்துறாங்க. அவ்வளவுதான் பார்த்துட்டு வர்றேன். ஆமா உன் பேச்சே புதுசா இருக்குது.

கிருஷ்ணன் : இன்னாது நான் புச்சா பேசறனா. வந்ததிலேந்து எங்களை காய்ச்சிகினே இருக்கற நீ.

கோலி : இங்கபாருணு உன்கிட்ட ஒரு முக்யமான விஷயம் சொல்லணும்... சேதுபதி... அதான் உன் வருங்கால மாமனாரு.

கிருஷ்ணன் : வருங்கால மாமனாரா!

கோலி : என் கையில் முக்கியமான ஒரு விஷயம் சொன்னாரு.

கிருஷ்ணன் : ஆ!

கோலி : வைஜெயந்தி பேர்ல பேங்ல ஒரு லட்ச ரூபாய் போட்டு வச்சிருக்காராம்.

கிருஷ்ணன் : ஆ!!!

கோலி : உன் கல்யாணம் ஆனவுடனே உங்கிட்ட கொடுத் துட்டு காசி ராமேஸ்வரம்னு போப்போறாராம்.

கிருஷ்ணன் : அ!

கோலி : உங்கிட்ட சொல்ல சொன்னாரு.

கிருஷ்ணன் : யோவ்! யார்கிட்டயா ரீல் வுடுற? எங்கிட்டயே லட்சம் கிட்சம்னு அளக்கறியே நீ!

கோலி : என்ன நீ ஒன்றும் தெரியாத மாதிரி பேசற? நீ நேற்று அரும்பாகத்துல பொண்ணு பாத்திய!

கிருஷ்ணன் : அரும்பாக்கமா! ஏற்கனவே நொந்து போயிருக் கிறேன் போயிடு.

போட் : கிருஷ்ணா நீ எதுவோ ஒரு பொண்ண அரும்பாக்கத்துல பார்த்தேன்னு சொன்னியே. இந்த ஆளு அதே பொண்ணதான் சொல்றான்னு நெனைக்கிறேன். ஏதுன்னு விசாரிச்சுக்கோ.



லட்ச ரூபாய் கிடைச்சுதுன்னா அப்புறம் நெனச்சி பாரு நம்ம நெலைமையை.

கிருஷ்ணன் : ம் சரி... ஏதுவோ என் பிரண்டு சொல்றான்னு கேக்கறன். கதைய மேல வுடு...

கோலி : கதையா! ஏய் என்ன வெளையாடுறியா? நேற்று அரும்பாக்கத்துல சேதுபதி பொண்ணு வைஜெயந்திய உங்க அண்ணனோட வந்து பொண்ணு பாத்துட்டு ஒண்ணுமே தெரியாத மாதிரி பேசற.

கிருஷ்ணன் : அ.. மன்னிச்சுக்கப்பா. எத்தனையோ பிகற பார்க்கறேன். ம்! இதா இந்த பிகற மறந்துட்டேன்.

போட் : கிருஷ்ணா ஓவர் ஆகட் பண்ணாத, அமுக்கி வாசி... அமுக்கி வாசி.

கிருஷ்ணன் : அமுக்கறேன்... அமுக்கறேன்... எனக்கு பொண்ணு ரொம்ப புடிச்சி போச்சு. ம் அட்ரஸ் கொடு.

கோலி : அட்ரஸா... நேற்றுதான் பொண்ணு பாத்துட்டு வந்துகிறே... இப்ப அட்ரஸ் கேக்கற.

கிருஷ்ணன் : யோவ்!... தொழில்ல ஆத்திர அவசரத்துக்கு ஆயிரம் வூட்ல பூருவோம்... அட்ரஸ் பாத்தா பூருவாங்க.

போட் : அமுக்கி வாசி . அமுக்கி வாசி...

கோலி : அ... இவன் என்னா அமுக்கி வாசி, அமுக்கி வாசின்றான்

கிருஷ்ணன் : இவன் நல்லா ஆர்மோனியம் வாசிப்பான்... அதான் அமுக்கி வாசிக்க சொல்றான். நீ நம்ம மேட்டருக்கு வா... அண்ணாத்த கூட வந்தானா, அட்ரஸ் ஞாபகம் வச்சிக்கல. பொண்ண போய் பார்த்து வரலான்னு...

கோலி : ஒஹோ வைஜெயந்திய தனியா மீட் பண்ணணுமா?

(கிருஷ்ணன் மெல்லிய சிரிப்பு)

நெ.15, பிள்ளையார் கோயில் தெரு அதான் பிள்ளையார் கோயில் பக்கத்து சந்து

கிருஷ்ணன் : அ... அம்!

கோலி : இப்ப வீடு ஞாபகம் வருதா.

கிருஷ்ணன் : ஆ ஞாபகம் வருது, வருது. ஒரு லட்சம் மட்டும் கிடைச்சதுன்னா அந்த புள்ளையாருக்கு ஒரு தேங்காய் உடைக்கிறேன்.

போட் : கிடைக்காட்டி?

கிருஷ்ணன் : உன்னை போட்டு உடைச்சிடறேன் கய்த!

போட் : அ!

கோலி : இவன் யாரு? இவன நான் பார்த்ததே இல்லை.

கிருஷ்ணன் : என்ன மட்டும் பார்த்துகிறியா... லூசு...

கோலி : சினிமா தியேட்டர்ல பிளாக்குல டிக்கட் விக்கறவன் மாதிரி இருக்கறான்.

கிருஷ்ணன் : அதான் அட்ரஸ் குடுத்துட்ட இல்ல... புட்டுக்க...

கோலி : புட்டுக்கன்னா? அம்! அப்புறம் நான் பார்த்துக் கறேன். கல்யாணத்துக்கு அப்புறம் பாத்துக்க றேன்னா

கிருஷ்ணன் : அவசரபடாதே...

கோலி : பையன் பேசறதே சரியில்ல. எதுவோ கெட்ட சகவாசம் ம். இவன் அண்ணன் கைல சொல்லி வைக்கணும்.

கிருஷ்ணன் : ம் என்ன முணுமுணுகரிய...



கோலி : ம் என்ன ஒண்ணுமில்ல...

கிருஷ்ணன் : பொண்ணு பேரு என்ன சொன்ன?

கோலி : சுண்டல் அக்காம் வைஜெயந்தி பேர மறக்க முடியுமா?

கிருஷ்ணன் : வைஜெயந்தி, சும்மா சொல்ல கூடாது. Item பேரு சூப்பர். பொஞ்சாதி லவுட்டிகிறேன்.

கோலி : லவுட்டிகிறியா. என்னடா இது ஒண்ணுமே புரியல

கிருஷ்ணன் : ஒண்ணுமே புரிய வானாம், ரைட் வுட்டுக்க. ஹேய் சந்திரனும் சூரியனும் பெத்தது இங்கு நான்தான். டேய் போட்டு... எனக்கு இன்னமோ இவன் சொல்றது உண்மையா இருக்குமான்னு தோணல. இந்த லூஸு பேச்ச கேட்டு எதுவாவது கேஸ்ல மாட்டிகினா வம்பு.

போட் : கிருஷ்ணா நீ கவலயே படாதே. என் Criminal Brainல என்ன யோசிச்சு பார்க்கறேன்.

கிருஷ்ணன் : உன் Brain என்ன Tune I சேனல் II சேனல் மாதிரி கிரிமினலுக்குன்னு தனியா Brain வச்சிகிறியா நீ.

போட் : இங்க பாரு கிஷ்ணா முதல்ல நம்ம அந்த வூட்டுக்கு போவோம். யாரு என்னன்னு இருக்கற நிலைமை என்னான்னு தெரிஞ்சுப்போம். அல்லாம் கரெக்டா வந்ததுன்னு விச்சக்க நம்ம லட்சாதிபதிதான்.

கிருஷ்ணன் : இவ்வளவுதானா! உன் Criminal Brain சூப்பர் தான்... இப்ப நீ புட்டுக்க.

போட் : இதான்... நம்மலியே ஒதுக்கினியே. இந்த மாதிரி விஷயத்துகெல்லாம் உனக்கு அப்ப அப்ப Idea கொடுக்க இந்த மாதிரி ஒரு ஆளு வேணும்பா.

கிருஷ்ணன் : அக்காம்

போட் : இதுல இன்னும் ஒரு பிரச்சனை கீது...

கிருஷ்ணன் : என்ன பிரச்சனை

போட் : கல்யாணத்துக்கு அப்புறம்தான் ஒரு லட்சம் கிடைக்கும்னு அந்த ஆளு சொன்னான் இல்லியா?

கிருஷ்ணன் : அம்...

போட் : அப்படின்னா என்னா அர்த்தம்? நீ அந்த பொண்ணை கல்யாணம் கட்டிக்கணும்னு அர்த்தம்.

கிருஷ்ணன் : கட்டிகினா போச்சு... லட்சத்தோட மகாலட்சுமி யும் வந்தா வாணான்னா சொல்லுவாங்க.

போட் : ம். அப்ப உம்மேல உசிரய வச்சினிகீதே உம் மாமான் பொண்ணு சிங்காரி லட்சுமி, அதுக்கு என்னா பதில் சொல்ல போற.

கிருஷ்ணன் : லட்சத்துல பாதிய கொடுத்து சிங்கார லட்சுமிய சின்னவீடா செட்டப்பா வச்சிக்க வேண்டிது தான்.

சிங்காரி : வச்சுப்பயா வச்சுப்ப. அரண்மனை மாதிரி வூடு கட்டி உன்ன மகாராணி மாதிரி வச்சுப்பேன்னு சொல்லிட்டு, இப்ப என்னடான்னா என்னயே சின்ன வீடா செட்டப் பண்ண போறியா.



கிருஷ்ணன் : தெ சிங்காரி! நீயா, எப்ப வந்த?

சிங்காரி : நான் எப்பவோ வந்துட்டேய்யா. இப்ப புதுசா வந்துட்டாளே மஹாலட்சுமி அவ யாரு.

போட் : உன் சக்களத்தி

கிருஷ்ணன் : அட கய்தே! தெ, கம்முனுகிட. அது வந்து மகாலட்சுமி அருள் இருந்தா நாம லட்சாதிபதி ஆயி, குடிசையில இருந்கற சிங்காரலட்சுமிக்கு சின்னதா வூடு கட்டி கொடுக்கலாம்னு அப்படின்னு சொல்லிக்கினு இருந்தேன்.

சிங்காரி : இங்க பாருய்யா! நா எங்கம்மா வயித்துல இருக்கறப்பவே கிருஷ்ணன்தான்னு சொல்லிட் டாங்க.

கிருஷ்ணன் : வயித்துல என்ன குழந்தை இருக்குதுன்னு Scan பண்ணி சொல்லுவாங்க. அதுக்காக வருங்கால புருஷன் பொண்டாட்டி யாருன்னு கூடவா சொல்லுவாங்க.

சிங்காரி : ஒரு பொண்ணு தாம் போட்டுக்கற நகைய இன்னொருத்தியோட பங்கு போட்டுப்பா;

கிருஷ்ணன் : ஆ!

சிங்காரி : தாம் கட்டிக்கிற புடவையை வேண்ணா இன் னொருத்தியோட பங்கு போட்டுப்பா;

கிருஷ்ணன் : பட்ட பகல்லயே இன்னா பொய் சொல்றா பார்த்தியா?

சிங்காரி : ஆனா தான் கட்டிக்கப்போற புருஷனை மட்டும் பங்கு போட்டுக்க மாட்டாயா.

கிருஷ்ணன் : அதான் நீங்களே கூறு போட்டு வித்துட் டிங்களே.

சிங்காரி : உனக்கு கண்ணாலம்னு ஒண்ணு நடந்தா என்கூட தான்ய்யா.

கிருஷ்ணன் : அய்யோ.

சிங்காரி : என்னை வுட்டுட்டு வேற ஒருத்திக்கூட போன...!

கிருஷ்ணன் : சிங்காரி தயவு செய்து அந்த மாதிரி முடிவுக் கெல்லாம் வந்துராதம்மா. தற்கொலை மட்டும் பண்ணிக்குன, பேயா அலைவே.

சிங்காரி : அது அந்த காலம்யா. உன்னை கொலை பண்ணிட்டு ஜெயிலுக்கு போறேன். நான் வரேன்.

கிருஷ்ணன் : கொலையும் செய்வாள் பத்தினின்னு கேள்விப் பட்டிருக்கறேன். கொலையும் செய்வாள் காதலின்னு இப்பத்தான் கேள்விப்படுறேன்.

போட் : இப்ப புரிஞ்சிகினியா

கிருஷ்ணன் : புரியது. பணம்வந்தா, இந்த மாதிரி கவலையும் வந்துருன்னு புரியது.

போட் : இந்த மாதிரி பிரச்சனையெல்லாம் தீர்த்து வைக்க இந்த மாதிரி ஒரு ஆளு பக்கத்துலேயே இருக்கணும்பா.

கிருஷ்ணன் : அ! ஹா!

போட்டு : இந்த போட்டு நாராயணன் எத்தன பேரோட பிரச்சனையை தீர்த்து வச்சிக்கிறேன் தெரியுமா?

கிருஷ்ணன் : அப்படியா!

போட்டு : இவ்வளவு ஏன்? பக்கத்து தெரு டாக்டர் தண்டபாணி பையனுக்கு எதுவோ காதல் பிரச்சனை. நான்தான் தீர்த்து வச்சேன்.



கிருஷ்ணன் : உம்

போட்டு : A1 ஸ்டேசன் இன்ஸ்பெக்டர் பொண்ணு கல்யாணத்திலேயே குழப்பம். நான்தான் தீர்த்து வச்சேன்.

கிருஷ்ணன் : அப்ப நம்ம தெருவுல இருக்காரே ஹைகோர்ட் வக்கில் வரதராஜன், அவர் வீட்டு லஷ்மிக்கு நீதான் கல்யாணம் செஞ்சு வச்சியா?

போட்டு : ஓ... ஆ... ஆ... ஆமா... வரதராஜன்தானே. ஆமா... ஆமா நான்தான் கல்யாணம் பண்ணி வச்சேன். இப்ப ஒரு குழந்தைகூட இருக்குமே.

கிருஷ்ணன் : குழந்தை இல்லடா கய்தே, கன்னுக்குட்டி.

போட்டு : என்ன சொல்ற?

கிருஷ்ணன் : லஷ்மி அவங்க வூட்டு பசுமாடுறா...

போட்டு : ஆன்!!!

– திரை –

## நம்மால் முடியும்

மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை விளக்கும் 'நம்மால் முடியும்' என்னும் வீடியோ படத்தினை சென்னை மாநகராட்சியும், திருவல்லிக்கேணி சீனிவாசா இளைஞர் சங்கமும் இணைந்து தயாரித்துள்ளது. முதலமைச்சர் வெளியிட்ட இப்படம் பத்திரிகை யாளர்களுக்காக நேற்று ரிப்பன் மாளிகையில் திரையிட்டுக் காட்டப்பட்டது.

வீடியோ படத்தை இயக்கி, நடித்த நடிகர் எஸ்.வி. சேகர் மற்றும் பிற நடிகர்களுக்கும், தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் நினைவுப் பரிசுகளை துணை மேயர் கராத்தே தியாகராஜன் வழங்கினார்.

*– நன்றி, மக்கள் குரல் 25.8.2002*

## காட்சி – 7

| | |
|---|---|
| இடம் | வைஜெயந்தி வீடு |
| பாத்திரங்கள் | போட் நாராயணன், கிருஷ்ணன், வைஜெயந்தி, சேதுபதி |

கிருஷ்ணன் : டேய் போட்டு... அன்னிக்கு ஒரு வூட்டுல பூந்தேன்னு சொல்லலே... அந்த வூடுதான் இது... அந்த ஆள் சொன்ன வூடு இதுதான்னு நெனைக்கிறேன். என்ன யாரையும் காணோம்.

போட் : அய்யா... அம்மா...

கிருஷ்ணன் : சீ கழுதை! ராப்பிச்சைன்னு நெனைச்சிக்கப் போறாங்க...

போட் : இரு... வேற மாதிரி கூப்டுக்கறேன்... (மெல்ல) ஏங்க... ஏங்க...

கிருஷ்ணன் : அடச்சீ... இதுக்கு அதுவே பெட்டர்

போட் : ய... வூட்டுல யாரும் இல்லியா?

சேதுபதி : யாரு! அடடே... மாப்ள தம்பியா! வா...வா... வா.

கிருஷ்ணன் : நான் தான் மாப்ள... இவன்தான் தம்பி.

சேதுபதி: : சொல்லவே இல்லியே!



கிருஷ்ணன் : தம்பின்னா உடன்பிறப்பு, ரத்தத்தின் ரத்தம்னு வச்சுக்கங்களேன்.

சேதுபதி : அப்ப சொந்த தம்பி இல்லியா!

கிருஷ்ணன் : பார்த்தியா! கூட பொறந்தாதான் தம்பியா? உடன்பிறவா சகோதரன். ம். சார் கரெக்டா புரிஞ்சுக்கனாரு.

சேதுபதி : வைஜெயந்தி... அம்மா வைஜெயந்தி, மாப்ள வந்துருக்காரும்மா.

வைஜெயந்தி : நீங்களா... நீங்க வருவீங்கன்னு எனக்கு தெரியும்.

கிருஷ்ணன் : ஹா...ஹா...ஹா

வைஜெயந்தி : இருங்க காபி கொண்டு வரேன்.

கிருஷ்ணன் : காபி எஸ்டேட் சொந்தமாக வச்சிக்கிறார்னு நெனைச்சிறேன். எப்ப வந்தாலும் காபி கொடுக்கறாங்க.

சேதுபதி : அ! என்ன நீங்க தீடீர்னு வந்து சர்ப்ரைஸ் கொடுக்கறிங்க.

கிருஷ்ணன் : திடீர்னு இல்ல... பிளான் போட்டுத்தான் வந்துக்கிறோம்.

சேதுபதி : Plan ஆ...ஓ...உங்க அண்ணனுக்கு தெரியாம வந்துருக்கேன்னு சொல்றீங்களா.

கிருஷ்ணன் : அண்ணனையே தெரியாது... அப்புறம்தானே அண்ணனுக்கு தெரியும்.

சேதுபதி : நானே உங்க வீட்டுக்குதான் கிளம்பிண்டே இருக்கேன்.

கிருஷ்ணன் : எங்க வூட்டுக்கா? எங்க வூடு உங்களுக்கு எப்படி தெரியும்?

சேதுபதி : என்னங்க நீங்க! அட்ரஸ் இருக்கே. நெ.5, நாச்சியப்பன் தெரு, மாம்பலம், சென்னை.

கிருஷ்ணன் : அது நாச்சியப்பன் தெரு இல்லீங்க... நொச்சி குப்பம். சாந்தோம்ல கீது.

சேதுபதி : நொச்சிகுப்பமா?

கிருஷ்ணன் : அய்ய... சேம் சைடே கோலு போடறியே..

சேதுபதி : சேம் சைடு கோலா... தம்பி என்ன புட்பால் பிளேயரா.

கிருஷ்ணன் : அ... புட்பால் என்ன கில்லிதாண்டு கூட நல்லா ஆடுவேன்.

சேதுபதி : கோல்... கில்லிதாண்டு... எனக்கு ஒண்ணும் புரியலை.

நாராயணன் : புரியாத வரைக்கும் நல்லதுதான்.

சேதுபதி : மாப்ள ஒரு முக்கியமான விஷயம் சொல் லணும்னு உங்க வீட்டுக்கு கிளம்பினேன். நீங்களே வந்துட்டிங்க.

கிருஷ்ணன் : முக்கியமான விஷயம்தானே... தெரியுமே... தெரியும்.

சேதுபதி : தெரியுமா... நானே இன்னிக்குதான் ஜோசியர் வீட்டுக்கு போய் வந்தேன்.

கிருஷ்ணன் : இதுக்கு ஏங்க ஜோஸியர் வூட்டுக்கு போறீங்க.

சேதுபதி : இன்னா மாப்ளே... நல்ல நேரம் பார்க்க ஜோசியர் வீட்டுக்கு தானே போகணும்.



கிருஷ்ணன் : நமக்கு இந்த சென்டிமென்ட்லாம் கிடையாது. எடுத்தமா குடுத்தமா அவ்ளதான்.

சேதுபதி : அப்படில்லாம் சொல்லாதிங்க மாப்ள... சம்பிர தாயம்னு ஒண்ணு இருக்கே.

கிருஷ்ணன் : என்ன சம்பிரதாயம்? எவ்வளவு நேரம் ஆவப் போவுது?

சேதுபதி : நேரம் இன்னமோ ஒண்ணறைமணிநேரம்தான். ஆனா முகூர்த்த நேரத்தை பார்த்துதானே வைக்கணும். ஆயிரம்காலத்து பயிரு.

கிருஷ்ணன் : பயிரா.

போட் : கிருஷ்ணா தரகர் சொல்லவே இல்லியே.

கிருஷ்ணன் : பெரிசு என்னமோ பயிருங்குது. கடைசியில் பார்! கலப்பையே கொடுத்துடப் போவுது கையில.

சேதுபதி : என்ன! இது ஒரு சுபகாரியம்.

கிருஷ்ணன் : அம்

சேதுபதி : நாலு பேருக்கு தெரிஞ்சி செய்ஞசாதான் கொடுக்கற எனக்கும் கௌரவம்... எடுக்கற உங்களுக்கும் கௌரவம்.

கிருஷ்ணன் : நீங்கதான் கொடுக்கறிங்க, நாங்க ஏன் எடுக்கறோம்.

சேதுபதி : தம்பி பேரு என்னன்னு சொல்லவேலயே?

கிருஷ்ணன் : அதான் நான் என் பேரையே சொல்லல. அப்புறம் எங்க தம்பி பேர சொல்றது?

சேதுபதி : என்னங்க நீங்க. உங்க பேரு தெரியாதா என்ன? சிவராமன்.

கிருஷ்ணன் : கிருஷ்ணன்

சேதுபதி : முழு பேர சொல்றிங்களா? சிவராமகிருஷ்ணன் தானே?

கிருஷ்ணன் : ஆ... நீங்க சொன்னா சரி. இவன் பேரு போட் நாராயணன்...

சேதுபதி : போட் நாராயணனா? போட் இவர் இயற் பெயரா? பட்டப் பெயரா?

கிருஷ்ணன் : குடும்ப பேரு. இவங்க அப்பா பேரு கட்டுமரம் கந்தசாமி. தாத்தா பாய்மரம் பக்கிரி.

சேதுபதி : தண்ணி மேல போற குடும்பம் போல இருக்கு.

வைஜெயந்தி : இந்தாங்க காபி. அன்னிக்குதான் கூப்பிட கூப்பிட ஓடிட்டிங்க. இன்னிக்கு இருந்து டிபன் சாப்டு போங்க.

கிருஷ்ணன் : டிபனுக்கெல்லாம் துட்டு குடுத்திடுங்க, ஓட்டல்ல சாப்டுக்கறோம்.

வைஜெயந்தி : என்னங்க நான் டிபன் தர்ரேன்னு சொல்றன் நீங்க துட்டு Hotelன்னு சொல்றிங்க.

கிருஷ்ணன் : அது இல்லிங்க மாமா.

சேதுபதி : மாமா... மாமா என் நெஞ்சை தொட்டுட்டிங்க.

(கிருஷ்ணன் சூட்கேஸை பார்த்து)

கிருஷ்ணன் : லட்ச ரூபாயா? அங்கேயே வச்சுக்கறிங்க!

சேதுபதி : எப்படி பொண்ணு காபி

கிருஷ்ணன் : பேஷ்! பேஷ்! ரொம்ப நன்னாயிருக்கு. காபின்னா அது வைஜெயந்தி காபிதான்.





சேதுபதி : தம்பி எப்பவுமே தமாஷ்தான்.

கிருஷ்ணன் : இல்லீங்க, காபி நெஜமாவே நல்லா இருக்கு. என்னங்க உங்க காபியிலே நான் மெல்ட் ஆயிட்டேன்.

சேதுபதி : ம் ரொம்ப ஹாட்டா இருந்துதா...

கிருஷ்ணன் : இல்லிங்க... சத்யமா தீக்குளிக்கட்டுமா?

வைஜெயந்தி : அய்யோ இன்ன வார்த்தை சொல்றிங்க.

கிருஷ்ணன் : இல்லிங்க... நானும் தாமாஷுக்குதான் சொன்னேன்.

வைஜெயந்தி : நெஜமாலும் எப்படிங்க முடியும்?

கிருஷ்ணன் : நான் குளிக்கறதே கிடையாது.

வைஜெயந்தி : ஆமா உங்களுக்கு சமைக்க தெரியும்னு கோலி மாமா சொன்னாரே?

கிருஷ்ணன் : அடப்பாவி! எதை வச்சு எனக்கு சமைக்க தெரியும்னு சொன்னாரு. எனக்கு அடுப்பெரிக்க வைக்கவே தெரியாதுங்களே.

நாராயணன் : கிருஷ்டா பெருசு என்னடான்னா பயருன்னு சொல்லுது, பொண்ணு என்னடான்னா சமையல் அதுஇதுன்னு சொல்லுது. கடைசியில நம்ம கையில கலப்பையும், கரண்டியும்தான் கிடைக்க போவுது.

கிருஷ்ணன் : ஏங்க உங்க பொண்ணுக்கு மாப்ள தேடறிங்களா... உங்க வூட்டுக்கு சமையல்காரன் தேடறீங்களா?

சேதுபதி : இல்ல தம்பி தப்பா நெனைச்சுக்காதிங்க. பொண்ணுக்கு உங்கமேல அன்பு ஜாஸ்தி.

கிருஷ்ணன் : உங்க பொண்ணுக்கு அன்பு ஜாஸ்தின்னா நான் சமைக்கணும்னு அர்த்தமா?

சேதுபதி : என்னஙக எம் பொண்டாட்டிக்கு கூடதான் எம்மேல அன்பு ஜாஸ்தி. அதுக்காக நானா சமைச்சேன்? சமையல்காரியே இல்ல வச்சு கிட்டேன்.

கிருஷ்ணன் : சமையல்காரி மேல அன்பு ஜாஸ்தி அதான் வச்சிக்கினிங்க.

சேதுபதி : என்ன மாப்ள குடும்பத்துல குழப்பத்த உண்டாக்காதிங்க. சும்மா தமாஷுக்கு சொன்னேன்.

கிருஷ்ணன் : தமாஷ் தமாஷ்ன்னு எல்லாம் சீரியஸா சொல்றிங்க.

சேதுபதி : ஆமா நீங்க எந்த கம்பெனியில வேலை பார்க்கறிங்க.

கிருஷ்ணன் : நா வேலை பார்க்கறதா சொல்லவே இல்லியே.

சேதுபதி : என்னது நீங்க வேலை பார்கலியா

(கிருஷ்ணன் விழித்தல்)

போட் : (மெலிதாக) கிருஷ்ணா உஷாரு... நீ வேலை பார்க்கறதா தரகர் சொல்லியிருக்கான் போலே கீது.

கிருஷ்ணன் : அது... வேலன்னா... ஆபிஸுக்கு போய் வேலை பார்க்க மாட்டேன்னு சொன்னேன். ஆபிஸுக்கு வெளியிலேயே பார்த்துருவேன்னு சொன்னேன்.

சேதுபதி : ஒஹோஹோ! நீங்க Marketingல இருக்கிங்க இல்ல; மறந்தே போயிட்டேன். Marketingனா வெளியூரா, சிட்டி மட்டும்தானா.



கிருஷ்ணன் : அய்யா... நான் City லிமிட் தாண்டறதா இல்லியா.

சேதுபதி : உங்க கம்பெனியில் என்ன மார்கெட்டிங் பண்றாங்க?

போட் : பர்ஸ்ங்க

சேதுபதி : பர்ஸா? உங்களோட கஸ்டமர்ஸ் யாரு?

கிருஷ்ணன் : பர்ஸ் வச்சிருக்கற எல்லாரும் கஸ்டமர்தான்.

சேதுபதி : தாமாஷு நீங்க.

கிருஷ்ணன் : இது என்ன தாமாஷு?

சேதுபதி : உங்க கம்பெனி பிரைவேட்டா இல்ல பப்ளிக்கா?

போட் : Individual

சேதுபதி : இன்டிவிஜுவல்னா புரியலையே!

கிருஷ்ணன் : அதாவது அப்படின்னா நான் இன்டிவுசுவேல். எங்க கம்பெனி Private கஸ்டமர்ஸ்லா! அதான் சொல்றான்.

சேதுபதி : மாப்ள...

கிருஷ்ணன் : வைஜெயந்தி IPS ஆக இருக்கலாம். ஆனா நாளைக்கு IG ஆயிடுவாங்களா.

சேதுபதி : கிருஷ்ணா

போட் : பெருசு சொல்றத கவனிச்சியா! பொண்ணு IPS ஆம்! IPS ன்னா என்னா தெரியுமா?

கிருஷ்ணன் : இன்னா...

போட் : இன்டியன் போலீஸ் சர்வீஸு..

கிருஷ்ணன் : தப்பா நெனைச்சுகாதிங்க. எதுவோ தெரியாத உள்ள வந்துட்டோம். நாங்க பெரிய கிரிமினல் இல்லிங்க. சின்ன கிரிமினல்தான்.

என் மாமன்தாங்க இப்படி செய்ய வைக்குது. ஆனால் நான் ரொம்ப நல்லவங்க. நாளை நமதே MGR மாதிரி. வேணா எல்லா Stationலயும் கேட்டு பாருங்க. ஏட்டுக்கு சம்பளம் கரெக்டா வருதோ இல்லியோ, நான் கப்பம் கரெக்டா கட்டிடுவேன்.

சேதுபதி : நீங்க சொல்றது ஒண்ணுமே புரியலை.

கிருஷ்ணன் : புரியறமாதிரி சொல்லணும்னா எங்க தொகுதி MLA விட எனக்கு நல்ல பேரு. ஆமா நீங்க எந்த Station?

சேதுபதி : ரயில்வே Station

போட் : ரயில்வே Stationனா, நான் பார்த்தே இல்லியே.

கிருஷ்ணன் : நிறைய நாள் எனக்கு அங்கேதான் டியூட்டி.

சேதுபதி : மாப்ள உங்க விளையாட்டுக்கு அளவே இல்லியா? என் பொண்ணுக்கு ரேடியோவுல எத்தனை ஸ்டேசன்னு கூட தெரியாது.

கிருஷ்ணன் : அய்யோ பாவம்

சேதுபதி : என் பேரு சேதுபதி IPS. அவ பேரு வைஜெயந்தி IPS. கல்யாணம் ஆயிட்டிச்சின்னா இன்ஷியல் மாறிடும்னு சொல்ல வந்தேன்

கிருஷ்ணன் : நாங்களும் IPS தான். இன்டியன் பிட்பாக்கெட் சர்வீஸ்...



போட் : டேய் கம்முனு கிடறா.

சேதுபதி : மாப்ளே ஜோஸ்யர்கிட்ட கல்யாண தேதிய குறிச்சுட்டேன். ஏப்ரல் 1-7-10ன்னு 3 டேட் கொடுத்துருக்கார். உங்க வசதி எப்படி?

கிருஷ்ணன் : ஏன். நீங்க இப்பவே கொடுத்தாலும் வசதிதான்.

சேதுபதி : உங்க அவசரம் எனக்கு புரியது. இருந்தாலும் உங்க ஜாதகப்படி...

கிருஷ்ணன் : என் ஜாதகம் உங்களுக்கு எப்படி தெரியும். போலிஸுக்குள்ளே தெரியும்.

போட் : கிருஷ்ணா. ரொம்ப Press பண்ணிக்காதே. பெருசுக்கு டவுட் வந்துரப்போவுது.

கிருஷ்ணன் : சரிங்க. ஏப்ரல் 1 வசதிங்க. ஆனா ஏப்ரல் 1ன்னு ஏமாத்திற மாட்டிங்கள.

சேதுபதி : என்ன மாப்ள இப்படி சொல்லிட்டிங்க. எனக்கு நீங்க பொண்ணு பார்க்க வந்திங்களே, அப்பவே முடிவு பண்ணிட்டேன். நீங்கதான் மாப்ளன்னு - முகூர்த்த தேதிய நானே நேரில் வந்து உங்க அண்ணன்கிட்ட சொல்லிடறேன்.

கிருஷ்ணன் : வேணாம்... வேணாம்... எங்க அண்ணன் கைல நானே சொல்லிக்கிறேன். நீங்க எதுக்குங்க?

சேதுபதி : என்ன இருந்தாலும் நான் வந்து நேர்ல சொன்னத்தான் மரியாதை.

கிருஷ்ணன் : நீங்க வந்தா எம் மரியாதை போயிடும்... பரவாயில்லிங்க நான் சொல்லிக்கிறேன். வரட்டா! ஏப்ரல் 1ந் தேதி வந்துர்றோம். ஆ... வைஜெயந்தி... பாப்பா வர்றோம்.

சேதுபதி : தமாஷு... இவரில்லாம யாரு வருவாங்க

வைஜெயந்தி : பாருங்கப்பா! சம்பந்தா சம்பந்தம் இல்லாம பேசறாரு... எனக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குது.

சேதுபதி : உன்னை அவருக்கு ரொம்ப புடிச்சு போச்சும்மா. மாப்ள கம்பெனில வேலை பார்க்கறதுக்கு பதிலு சினிமாவுல நடிச்சிருந்தாரு... சூப்பர் ஸ்டார்... ஆயிடுவாரு... அதுவும் ஆள் மாறாட்ட சீன்னா அசத்திடுவாரு.

ஏமாற்றாதே ஏமாறாதே
ஏமாறாதே ஏமாறாதே
பாடல் ஒலிக்கிறது

– திரை –

**தினசரி வருமானம்,**
**நோயில்லாத உடல்,**
**அன்பான மனைவி,**
**பிரியமான வார்த்தை பேசும் உறவினர்,**
**தனக்கு அடங்கிய குழந்தைகள்,**
**பொருள் வர வழிவகுக்கும் கல்வி,**
**இந்த ஆறும் ஒரு மனிதனுக்கு இருந்தால்**
**அதுவே சொர்க்கம் ஆகும்!**

## காட்சி – 8

இடம் சிவராமன் வீடு
பாத்திரங்கள் சேதுபதி, கல்யாணம்

சேதுபதி : சார்... சார்

கல்யாணம் : என்னங்க நீங்க!

சேதுபதி : நான்தான் உங்க வருங்கால மாமனார். சேதுபதி... உங்க தம்பியோட வருங்கால மாமனாருன்னு சொல்ல வந்தேன்.

கல்யாணம் : ஒரு நிமிஷத்துல ஆடிப்போயிட்டேன். எங்க என் பிரம்மசரியத்துக்கு ஆபத்து வந்துருமோன்னு... சின்ன வயசுலேந்து எனக்கு கொஞ்சம் ஞாபக மறதி அதிகம்.

சேதுபதி : ஞாபகமறதி உங்களுக்கு மட்டும்தானே? உங்க தம்பிக்கு ஞாபகமறதி இருக்குமான்னு கேக்கறேன்.

கல்யாணம் : இல்ல, இந்த விஷயத்துல அவன் எனக்கு நேரெதிர். LKGயில் படிச்சத இப்பகூட ஒரு எழுத்து கூட விடாம சொல்லுவான்... டெய்லி என்னை அண்ணா அண்ணான்னு மறக்காம கூப்பிடுவான்ன பாருங்களேன்.

சேதுபதி : உண்மையிலேயே ரொம்ப ஞாபகசக்திதான். வந்த விஷயத்தை விட்டு வேறு ஏதோதோ பேசிட்டிருக்கேன்.

கல்யாணம் : நிச்சயதார்த்த எப்ப வச்சுக்கலாம்னு கேக்க வந்திங்களா? இதபாருங்க, பையனுக்கு பொண்ண புடிச்சு போச்சு, பொண்ணுக்கு பையன புடிச்சு போச்சு. அப்புறம் எதுக்கு நிச்சயதார்த்தம், லொட்டு, லொசுக்கு எல்லாம். சுருக்கமா சொல்லணும்னா நீங்க கொடுக்கறிங்க நாங்க எடுக்கிறோம்.

சேதுபதி : அதான் மாப்ளையே சொல்லிட்டாரே?

கல்யாணம் : மாப்ள சொல்லிட்டாரா? என் தம்பிய எப்ப பார்த்திங்க?

சேதுபதி : அவர்தான் எங்க வீட்டுக்கு வந்திருந்தாரே

கல்யாணம் : என் தம்பி உங்க வீட்டுக்கு வந்தானா! எப்ப?

சேதுபதி : முந்தா நேற்று சாயந்தரம்

கல்யாணம் : ஏதோ ஆபிஸ் விஷயமா போட்கிளப் நாராயணன் வீட்டுக்கு போறேன்னுதானே சொன்னான்.

சேதுபதி : அம்! போட் நாராயணனும் வந்தாரு.

கல்யாணம் : அந்த காலத்துலே தாலி கட்டாத வரைக்கும் பொண்ணு யாருன்னு மாப்ளைக்கு தெரியாது, மாப்ளே யாருன்னு பொண்ணுக்கு தெரியாது. இப்ப காலம் மாறி போச்சு.

சேதுபதி : அதுக்கு என்னங்க செய்ய முடியும்! காலம் மாறும்போது நாமளும் மாறணும். என்ன எடுத்துக்குங்க, பொண்டாட்டி முகத்த நான் பார்த்ததே கிடையாது.

கல்யாணம் : கல்யாணத்துக்கு முன்னாடியா பின்னாடியா?

சேதுபதி : சரி சரி... ஏப்ரல் 1ந் தேதி கல்யாணத்த வச்சுக் கலாம்னு மாப்ள சொல்லிட்டாரு.



கல்யாணம் : முகூர்த்த தேதிய அவனே சொல்லிட்டானா.

சேதுபதி : ஜோஸ்யரு சொன்னாரு... ஏப்ரல் 1 தான் கல்யாணத்துக்கு பொருத்தமான நாள்னு...

கல்யாணம் : ஜோஸியர் என்ன சொல்றது? நானே சொல்றன். மேரேஜ் டே is Nothing a Serious Day!

சேதுபதி : இவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் சொல றிங்களே. இப்பவே கொடுத்திங்கன்னா எடுத்துட்டு போயிடுவேன்னு சொன்னாரு.

கல்யாணம் : எதை?

சேதுபதி : பொண்ணத்தான். மாப்ள ரொம்ப பாஸ்ட்டா இருக்காரு.

கல்யாணம் : இருப்பான், இருப்பான். அவனுக்கு கல்யாண மயக்கம்.

சேதுபதி : கல்யாண மயக்கம்னு சொல்றதைவிட காபி மயக்கம்னு சொல்லலாம். பொண்ணு கொடுத்த காபில மாப்பிள்ளை அப்படியே மயங்கிட்டார். பாவம் ஒட்டல்ல சாப்டு அவருக்கு நாக்கு செத்து போயிடுச்சு போலிருக்கு.

கல்யாணம் : என் சமையல் அவனுக்கு ஒட்டல் சாப்பாடு மாதிரி ஆயிடுச்சுல்ல.

சேதுபதி : அப்ப நான் கிளம்பறேன். ஏகப்பட்ட வேலைய கவனிக்கணும்.

கல்யாணம் : என்ன அதுக்குள்ள கௌம்பிட்டிங்க. எங்க வீட்டுக்கு முதமுதல்ல வந்திருக்கிங்க...காபி போட்டு தர்ரேன், சாப்டுட்டு போங்க.

சேதுபதி : தப்பா நினைச்சுக்காதிங்க... நான் ஒட்டல் காபியெல்லாம் சாப்பிடறதில்ல

கல்யாணம் : என் காபிய ஓட்டல் காபின்னா சொல்லிட்டான் சிவராமன்... சிவராமா நான் காபியில டிகாஷனும் பாலுமா கலந்து கொடுத்தேன்! இல்லடா... இல்ல. என் அன்பையும் பாசத்தையும் வேர்வையையும் தானடா கலந்து கொடுத்தேன். என்னாலே தாங்க முடியலையே...ம்.. அழணும் போல இருக்கே.

*(குழந்தை அழும் சத்தம்)*

– திரை –

## அறிவொளி வகுப்பு எஸ்.வி. சேகர் நடத்தினார்

**மதுரையில் நடிகர் எஸ்.வி. சேகர் நேற்று அறிவொளி வகுப்பு நடத்தினார். அறிவொளி இயக்கத்தில் எழுதப்படிக்க கற்று வருவோரை ஊக்கப்படுத்த அவர் சில யோசனைகள் தெரிவித்தார்.**

**நேற்று நடிகர் எஸ்.வி. சேகர் மதுரை சுகாதார அலுவலகத்தில் உள்ள அறிவொளி மையத்துக்குச் சென்றார். அங்கிருந்த அனைவருமே 40 வயதை தாண்டியவர்கள். மகாலட்சுமி என்ற இன்ஜீனியரிங் பட்டாதாரி. முழுநேர கற்பிக்கும் பணியில் ஈடு பட்டிருப்பதை அறிந்த சேகர், அப் பெண்ணின் சேவையை பாராட்டினார். கற்போருக்கு 'சினிமா' 'அன்பு' போன்ற வார்த்தைகளை எழுதிக் காண்பித்து படிக்கச் செய்தார். அவர்களுக்கான பாடத்தில் வினாடி – வினா நடத்தினார். அடுத்து சில மையங்களுக்கும் அவர் சென்று வகுப்புகள் நடத்தினார். அவர் சென்ற மையங்களில் கற்போரிடம் அளவாக குழந்தைகள் பெறுவதுடன் அக்குழந்தைகளை படிக்க வைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.**

**இந்த மையங்களுக்கு கரும்பலகை நாற்காலி போன்ற அடிப்படை வசதிகளை சேவை மனப்பான்மை உடையோர் செய்து தர முன் வரவேண்டும் என எஸ்.வி.சேகர் கேட்டுக்கொண்டார்.**

## காட்சி – 9

இடம் : குமார் வீடு

பாத்திரங்கள் : சிவராமன், குமார், சிங்காரி

சிவராமன் : என்னடா குமார்... எப்படி இருக்கே? சௌக்யமா?

குமார் : வாடா சிவராமா... கும்பிட போன குருக்கள் குறுக்கே வந்த மாதிரி... உன்னைத்தான் பார்க்கணும்னு நினைச்சுட்டிருந்தேன். நீயே வந்துட்டே...

சிவராமன் : என்னடா கடன் கிடன் வேணுமா.

குமார் : அதெல்லாம் ஒண்ணும் வேணாம்.

சிவராமன் : இல்லடா பிரண்ட்ஸ்களெல்லாம் 5,10 கைமாத்து வேணும்னா தெய்வம் அது, இதுன்னு சொல் வாங்க... அதான் சொன்னேன்.

குமார் : அதில்லடா, எனக்கு கல்யாணம் Fix ஆயிருக்கு.

சிவராமன் : நான்தான் மாப்ள தோழனா இருக்கணுங்கறியா!

குமார் : அதில்லடா.

சிவராமன் : மாப்ளையாவே இருக்கணும்கறியா? சரி சொல்லு?

குமார் : என்னோட மேரேஜ் Love மேரேஜ்...

சிவராமன் : யாருக்கும் தெரியாம திருநீர்மலையிலே திருட்டுத் தனமா கல்யாணம் செஞ்சுக்கப் போற... அதானே...

குமார் : எப்படிடா கரெக்டா சொல்லிட்ட!

சிவராமன் : என்னடா பெரிய விஷயம்! தமிழ் சினிமா... டிராமல ஆரம்பிச்சு அந்த காலத்துல இருந்து இந்த காலம் வரைக்கும் சொல்ற டயலாக் தான்... கல்யாணம்னா திருநீர்மலைதான்.

குமார் : என் சைடுக்கு சாட்சியா ஜால்ரா ஜகன்னாதன் வர்ரான்...

சிவராமன் : ஒரு நாளைக்கு 100 ரூபாய்... சோறு போட்டா யாருக்கு வேணா ஜால்ரா போடுவான் அவன்தானே.

குமார் : பொண்ணு சைடுலதான் யாரும் இல்லடா?

சிவராமன் : அப்ப என்னை மச்சான்னு சொல்லுற... வரேன்... வரேன்... எங்கே என் தங்கச்சி.

குமார் : ஏப்ரல் 1ம் தேதி தானே கல்யாணம் Fix பண்ணியிருக்கேன்.

சிவராமன் : திருட்டு கல்யாணம்னு சொல்ற... ஏப்ரல் 1ந் தேதின்னு சொல்ற... கண்டிப்பா நடக்கும் இல்ல!

குமார் : என்னடா அப்படி சொல்ற! எங்க 2 பேர் ஜாதகப்படி அன்னிக்குத்தான் நல்ல முகூர்த்தம். ஆமா உங்க அண்ணன் உனக்கு கல்யாணம்னு சொல்லிட்டிருந்தாரே எப்ப முகூர்த்தம்?

சிவராமன் : கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சி

குமார் : ரொம்ப சந்தோஷம். பொண்ணு பேரு என்ன?

சிவராமன் : பொண்ணு பேரு வைஜெயந்தி IPS



குமார் : என்னடா தெலுங்கு பீல்டு விஜயசாந்தியா! பெரிய ஆளுடா நீ! தெலுங்கு பீல்டுக்கு மாப்ளையா ஆவபோற...

சிவராமன் : அட... ச்சி! அபத்தமா பேசாதே. லேட்டஸ்ட் படம் பேரு தெரியும் இல்ல? லத்தி அடி! உனக்குத்தான் விழும் ஜாக்கரதை. பொண்ணோட அப்பா பேரு சேதுபதி IPS

குமார் : அடட! நம்ம விஜயகாந்த் அவரா உன் மாமனார். விஜயசாந்தியோட அப்பா விஜயகாந்தா எப்படிறா?

சிவராமன் : அ! சும்மாயிரா. உளர்றதுக்கு அளவே இல்லாம போச்சே. IPSன்றது குடும்ப இன்ஷியல். அப்பா பேரு சேதுபதி.

குமார் : அப்ப காலேஜ்ல உன் பின்னாடி சுத்துவாளே ருக்குமணி... சினிமாலே நீ கூட சிங்காரின்னு சொல்லுவியே... அவ எப்படி இருக்கறா?

சிவராமன் : லொள்ளு பார்ட்டி. ஜொள்ளு பார்ட்டி. நான் தான் உன் பொண்டாட்டி. நீதான் என் புருஷன் சொல்லும். அவங்க அப்பன் வேற குடிகாரன்.

சிங்காரி : ஆமாய்யா நான் ஜொள்ளு பார்ட்டிதான்.

சிவராமன் : யாரு ருக்மணியா. ஜொள்ளுன்னா உடனே வந்துட்டியே.

சிங்காரி : ருக்மணியா அவ யாருய்யா! புதுசா அன்னிக்கு யாரோ மகாலட்சுமின்ன! இன்னிக்கு ருக்மணிங் கறே.

குமார் : யாருடா! இதான் வைஜெயந்தியா?

சிங்காரி : ஜெயந்தியா? அடபாவி! நான் உயிரோட இருக்கும்போது வேற செட்டப் பண்ணிட்டியா.

சிவராமன் : சும்மா இரும்மா. வாயில வந்தத பேசறிய. முதல்ல நீ யாருன்னு சொல்லுங்க.

சிங்காரி : என்ன!

சிவராமன் : அ...ம்.

சிங்காரி : எங்கபோய் சொல்லுவேன், யாருகிட்ட சொல்லுவேன்.

சிவராமன் : ஓ. நீ யாருன்னு உனக்கே தெரியாதா! மெண்டல் போல இருக்கு.

சிங்காரி : மெண்டலா! அடப்பாவி! சின்ன வயசுலேர்ந்து உனக்கு நான் எனக்கு நீ. இப்ப ரெண்டு சிறுக்கிங்க வந்தவுடனே என்ன கிறுக்குன்னு சொல்றியா.

சிவராமன் : அம்மா தாயே நீ யாருன்னு எனக்கு சத்தியமா தெரியாது.

சிங்காரி : என்ன வந்தாலும் என் சிங்காரி உன்னை மறக்கமாட்டேன்னு சொல்லிட்டு இப்படி பேசறியே. அய்யோ...

சிவராமன் : இந்த மாதிரி டயலாக்கே நான் பேசியதே இல்ல.

சிங்காரி : யோவ் நீயும் நானும் டும்மி குப்பம், நொச்சி குப்பம் அங்கெல்லாம் ஆடிபாடுன்னதே மறந்துட்டியா.

சிவராமன் : டும்மிகுப்பம், நொச்சிகுப்பத்துல... டூயட்டா... இந்த இடமெல்லாம் எங்க இருக்குதேன்னே எனக்கு தெரியாதுங்களே... ஆ...!



சிங்காரி : எனக்கு தலையை சுத்துதே.

குமார் : என்னடா... தலையை சுத்துதுன்னா... ஆ... அந்த அளவுக்கு வந்திடுச்சா...

சிவராமன் : சும்மா இருடா... சினிமா பைத்தியம், பணம் பைத்தியம் மாதிரி இது ஜொள்ளு பைத்தியம் போல இருக்குது. வாடா போயிடலாம்... மாட்டிகினா பெரிய பிரச்னையாயிடும்... வாடா ஓடி போயிடலாம்.

சிங்காரி : அடப்பாவி... போயிட்டியா ராமன்னு உன்னை நெனைச்சேனே, பேருக்கேத்த மாதிரி கிருஷ்ணனா மாறிட்டியே... இரு எங்க நைனாகிட்ட சொல்லி இதுக்கு ஒரு வழி பண்றேன். நைனா...

– திரை –

**இரத்ததானம் செய்யுங்கள், உயிரைக் காப்பாற்றுங்கள்**

- இரத்த தானம் செய்தல் புத்துயிர் கொடுப்பதற்கு ஒப்பாகும்.
- 18 லிருந்து 55 வயதிற்குட்பட்ட, சுமார் 46 கிலோ எடையுள்ள எவரும் 3 அல்லது 4 மாதத்திற்கு ஒரு முறை இரத்த தானம் செய்யலாம்.
- தானமளித்த இரத்தத்தின் பெரும்பகுதி, தானமளித்த சில மணி நேரங்களிலும், எஞ்சிய பகுதி சில வாரங்களிலும் இயற்கையாகவே ஈடு செய்யப்படுகிறது.
- இரத்த தானம் செய்வதால் பலவீனமோ, தலை சுற்றலோ ஏற்படுவதில்லை. தானம் செய்த அரை மணி நேரத்தில், நமது வழக்கமான வேலைகளை கவனிக்கலாம்.
- இரத்த தானத்தின் போது, நமது உடம்பிலுள்ள சுமார் 6000 சி.சி. இரத்தத்தில் இருந்து, மிகக் குறைந்த அளவே. அதாவது 300 சி.சி.யே எடுக்கப்படுகிறது.
- இரத்த தானம் உங்களை ஒரு மிகச் சிறந்த குடிமகனாக உருவாக்குகிறது.

– www.bloodserve.com. ***எஸ்.வி. சேகர்*** ($O^{+ve}$)

**காட்சி – 10**

**இடம்** **சிவராமன் வீடு**

**பாத்திரங்கள்** **சிவராமன், கல்யாணம், சேதுபதி**

கல்யாணம் : சிவராமா... உன்னை சீராட்டி பாராட்டி வளர்த்த உங்க அண்ணன்கிட்டியே நாளைக்கு வரப்போறவளுக்காக பொய் சொல்றியா? பரவாயில்ல, கிளிக்கு ரெக்கை வந்துடுத்து... பறந்து போயிட்டுது.

சிவராமன் : என்னது கிளி பறந்து போயிடுச்சா... ஏன் காசு கொடுக்காம கிளி ஜோஸ்யம் பார்த்தியா?

கல்யாணம் : வாடா வா! எங்க போயிட்டு வரே?

சிவராமன் : சினிமாவுக்குத்தான் போயிட்டு வரேன்.

கல்யாணம் : (கிண்டலாக) என்ன சினிமாவுக்கு?

சிவராமன் : வைஜெயந்தி IPS

கல்யாணம் : வைஜெயந்தி IPS சினிமாவுக்கு போனியா இல்ல, வைஜெயந்தி IPஎஸ்ஸ பார்த்துட்டு வர்றியா?

சிவராமன் : வைஜெயந்தி IPS–ஸ பார்த்துட்டு அப்படியே ஹைதராபாத்துல டிபன் சாப்பிட்டுட்டு வரேன்.

கல்யாணம் : ஓ... ஆந்திரா டிபனா





சிவராமன் : என்ன நீ... என்னென்னமோ பினாத்துற?

கல்யாணம் : சொல்லுவடா சொல்லுவே, உன்னை தோள்ளேயும், மார்புலயும் போட்டு வளர்த்தா நானா பினாத்துறேன்.

சிவராமன் : ஏன் குழந்தையா இருக்கும்போது எல்லோரும் தோள்ளேயும் மார்லேயும் போட்டுதான் வளர்ப்பாங்க. ஏற்கனவே நான் வேதனையிலே வந்திருக்கேன். நீ வேற டென்ஷன் பண்ணாதே. எனக்கு காபி கொண்டா.

கல்யாணம் : ஏன் அவங்க வீட்ல கொடுக்கலியா?

சிவராமன் : எவங்க வீட்ல?

கல்யாணம் : அதான் உன் வருங்கால...!

சிவராமன் : மானேஜர் வீட்லயா...

கல்யாணம் : கல்யாணம் ஆனதுக்கு அப்புறம்தான் பொண்டாட்டி தாசன்னு மறைமுகமா சொல்றியா?

சிவராமன் : என்ன உளர்றான்... என் ஆபிஸுக்கு புதுசா மேனேஜர் வர்ராறு ஆபிஸ் விஷயமா முந்தா நேற்று அவங்க வீட்டுக்கு போனேன். அதுக்கும் பெண்டாட்டிக்கும் என்ன சம்மந்தம்?

கல்யாணம் : ம்... இந்தா காபி.

சிவராமன் : காபி நெறைய டிகாஷன் ஊத்தாதேன்னு சொல்லியிருக்கேன் இல்ல. இது என்ன காபியா கஷாயமா.

கல்யாணம் : நான் கொடுக்கற காபி கஷாயம் மாதிரி இருக்கா?

சிவராமன் : என்னோட வருங்கால... மானேஜர் வீட்ல காபி கொடுத்தாங்க. அது காபி. அந்த காபி கொடுத்த கைக்கு வைர மோதிரம்தான் செஞ்சு போடணும்.

கல்யாணம் : இவ்வளவு வருஷமா சமைச்சி போடறவனுக்கு ஒரு வாட்ச்கூட வாங்கி கொடுத்ததில்ல. ஒரு டம்ளர் காபி கொடுத்தவளுக்கு வைர மோதிரமா?

(சிவராமன் காபியை கீழே துப்புதல்)

சிவராமன் : உவ்வே... காபியா இது.

கல்யாணம் : நான் கொடுக்கற காபி துப்புற அளவுக்கு இருக்கா... இருக்கும். என் காபியை குடிச்சா உனக்குதான் நாக்கு செத்து போயிடுமே.

சிவராமன் : நானே செத்து போயிடுவேன். இதோ பார்... காபியிலே கரப்பான் பூச்சி...

கல்யாணம் : சரி சரி... வேற காபி தரேன்... ஒரு முக்யமான விஷயம்.

சிவராமன் : அடுத்த காபில பல்லி போட்டு தரேங்கறியா.

(சேதுபதி வருகிறார்...)

சேதுபதி : நமஸ்காரம்...

சிவராமன் : வந்துட்டாரு பாரு சேதுபதி IPS... அவருக்கும் சேர்த்து பல்லிய போட்டு கொண்டா...

சேதுபதி : அடடா! அவர் தான் உன் வருங்கால மானேஜ ரோட அப்பா...

சிவராமன் : மானேஜரா...! இவருக்கு 50 வயசுல ஒரு பையனா. சொல்லவே இல்லியே...

சேதுபதி : மாப்ளைக்கு எப்பவுமே தாமாஷு

சிவராமன் : என்னய்யா தமாஷு?

கல்யாணம் : வைஜெயந்தியதான்...



சேதுபதி : கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் பொண்டாட்டி தான் வீட்ல மானேஜர். உங்க அண்ணன் அப்படி சொல்றார்.

சிவராமன் : ஓஹோ... சார் கல்யாண டேட் எப்ப பிக்ஸ் பண்ணியிருக்கிங்க? ஆபிஸுல லீவுக்கு சொல்லணும்.

சேதுபதி : தமாஷு போங்க. என்ன எதுக்கெடுத்தாலும் தாமாஷுபண்றிங்க

சிவராமன் : எதுக்கெடுத்தாலும் தமாஷுங்கறார் இவரு.. அப்ப நான் தாமாஷுக்குதான் பொண்ணு பார்த்தேனா... நெஜமாலும் கிடையாதா?

சேதுபதி : என்ன மாப்ள இப்படி பேசறிங்க? அதான் நீங்க சொன்ன மாதிரி ஏப்ரல் ஒண்ணு முகூர்த்தம் வைச்சிட்டேன்.

சிவராமன் : நான் சொன்னேனா... எப்ப சொன்னேன்?

சேதுபதி : ஏப்ரல் 1, 3,10 மூணு மூகூர்த்தம் சொன்னேன். முதல் முகூர்த்தத்திலேயே வைக்க சொன்னீங்க. நீங்க சரின்னு சொன்னா இப்பவே அழைச் சிட்டு போறேன்னு சொன்னிங்களே.

சிவராமன் : அழச்சிட்டு போறேன்னு சொன்னேனா! நான் என்ன உங்க பொண்ண லவ் பண்ணிட்டு உங்க சம்மதம் கேட்டேனா? ஏப்ரல் ஒண்ணு எங்களால முடியாது. முகூர்த்தத்த சேஞ்ச் பண்ணுங்க.

சேதுபதி : என்னது! முகூர்த்தத்த சேஞ்ச் பண்ணவா? என்ன மாப்ள இது அரசியல் மீட்டிங்கா இது. அடிக்கடி மாத்தறதுக்கு? அதையும் தவிர நீங்க சொன்னீங் களேன்னு பத்திரிக்கை அடிச்சிட்டேன்.

சிவராமன் : என்னது நான் சொன்னேன்னு பத்திரிக்கை அடிச்சிட்டிங்களா! என்ன நான் வந்து உங்க கனவுல வந்து சொன்னேனா?

கல்யாணம் : நீதாண்டா கனவுல பினாத்தற மாதிரி பேசற!

சிவராமன் : என்ன சொல்ற?

கல்யாணம் : ஏப்ரல் ஒண்ணாந்தேதி பிக்ஸ் பண்ண சொல்லிட்டு இப்ப மாத்த சொல்றியே!

சிவராமன் : உளராதிங்க! ஏப்ரல் ஒண்ணு என் பிரண்டு மேரேஜ்... பொண்ணு வீட்ல யாரும் கிடையாது... பொண்ணுக்கு சாட்சியா நான்தான் போகணும்.

சேதுபதி : ஊரையே சாட்சியா கூப்பிட்டு என் பொண்ணு கல்யாணத்த நான் நடத்தறேன். யாரோ ஒரு பொண்ணு கல்யாணத்துக்கு சாட்சியா போகப் போறேன்னு சொல்றீங்களே.

கல்யாணம் : நீ சாட்சியா போகலன்னா வேறு யாராவது சாட்சியா போக முடியும். ஆனா இங்க நீ இல்லாம யார்ரா தாலி கட்ட முடியும்...

சிவராமன் : அ...! என்ன மாதிரியே எவன்னா ஒருத்தன் இருப்பான் அவன் கட்டுவான்.

சேதுபதி : மாப்ள நீங்க ஏன் இப்படி பேசறிங்கன்னு புரியலை. ஆனா, மூகூர்த்த தேதிய குறிச்சி பத்திரிகை அடிச்சுட்டு அத மாத்தினா... இத பாருங்க என் பொண்ணு நிலைமையை... ஏன் தம்பி கொஞ்சம் யோசிச்சு பாருங்க...

கல்யாணம் : ஏய் சிவராமா!

சிவராமன் : என்ன! என்ன? இந்த முகூர்த்த தேதிய மாத்தினா உங்க அண்ணன உயிரோட பார்க்க



முடியாது... அப்படின்னு ஓ...ன்னு அழப்போற அப்படித்தானே. இந்த மாதிரி சிச்சுவேஷன்ல எமோஷனலோட, இதே டயலாக்தானே பேசப் போறிங்க?

சேதுபதி : மாப்ள நீங்க இன்னும் உங்க முடிவை சொல்லலையே?

சிவராமன் : சொல்றேன்... I am very Sorry...

கல்யாணம் : ஏய்... சிவராமா.... Climaxல பார்ப்போம்னு சொல்ல வந்தேன்.

ஒண்ணுமே புரியலை உலகத்திலே
என்னமோ நடக்குது
பாடல் ஒலிக்கிறது.

– திரை –

மற்ற நிகழ்ச்சிகளுக்கு வருவதுபோல் மேடை நாடகங்களுக்கு அதிக ஜனங்கள் வருவதில்லை என்று கூறுகிறார்கள்.

அனால் – இன்று ஆயிரக்கணக்கில் ரசிகர்கள் வந்திருக்கிறார்கள் என்றால், அந்தப் பெருமை திரு. எஸ்.வி. சேகருக்குத்தான் போய்ச் சேரும்.

அந்தக் காலத்தில் திரு. எஸ்.வி. சகஸ்ரநாம், திரு. என். எஸ். கிருஷ்ணன், திரு. நவாப் ராஜமாணிக்கம்பிள்ளை, திரு. ஆர். எஸ். மனோகர், திரு. சோ – இப்படி ரசிகர்களின் ரசனைக்கு ஏற்றபடி நாடகங்களை நடத்துபவர்கள் இருந்தார்கள். இன்றைக்கு நாடகம் பார்க்கும் வாய்ப்பு குறைந்து போய்விட்டது.

அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் திரு. எஸ்.வி. சேகர் ரசிகர்களை அதிகம் பெற்றிருக்கும் ஒரு திறமைசாலி! அதிர்ஷ்டசாலி.

*–3500 – வது நாடகவிழாவில் டாக்டர் நல்லி. குப்புசாமி*

## காட்சி - 11

| | |
|---|---|
| இடம் | கல்யாண மண்டபம் |
| பாத்திரங்கள் | வைஜெயந்தி, சிங்காரி, சேதுபதி, கோலீஸ்வரன், கிருஷ்ணன், கோட் நாராயணன் |

சேதுபதி : என்ன கோலி... எனக்கு சொந்தம்னு சொல்லிக்க நீ ஒருத்தன்தான் இருக்கே... கல்யாணத்துக்கு இரண்டு நாள் முன்னாடி வந்து ஹெல்பா இருப்பேன்னு நினைச்சா மாப்ளை வீட்டுக்காரன் மாதிரி இப்ப வர்றியே...?

கோலி : அது ஒண்ணும் இல்ல.... என் Close Friend ஒருத்தனுக்கு நேத்து Accident ... அத அட்டன்ட் பண்ணிட்டு வர வேண்டியதாயிடுச்சி.

சேதுபதி : Accident அட்டன்ட் பன்றியா என்ன உளர்ற??

கோலி : கல்யாணங்கறது Accident தானே? கல்யாணத்த அட்டன்ட் பண்ணிட்டு வந்தேன்னு சிம்பாலிக்கா சொன்னேன். நாளைக்கு இங்ககூட ஒரு Accident நடக்கப் போதே.

சேதுபதி : உன் வாயை மூடுறா! வாயிலே நல்ல வார்த்தையே வராதா?



கிருஷ்ணன் : என்ன மாமா சௌக்யமா?

சேதுபதி : வாங்க மாப்ள வாங்க! ஆமா அண்ணா வரலியா?

கிருஷ்ணன் : அண்ணா எப்படிங்க வருவாரு?

சேதுபதி : அண்ணா எப்படி வருவாரா? தம்பி கல்யாணம் அண்ணன் வராம எப்படி?

கிருஷ்ணன் : எனக்கு கொடுத்து வச்சது அவ்வளவுதாங்க. அவரு எத்தனையோ தம்பிங்க கல்யாணத்த நடத்தி வச்சிருக்காரு... என் கல்யாணத்த நடத்தி வைக்க உயிரோட இல்லியே.

சேதுபதி : என்ன மாப்ள சொல்றிங்க? உயிரோட இல்லியா நேத்துதானே அவர பார்த்தேன்.

கிருஷ்ணன் : நேத்து பார்த்திங்களா? எப்படிகிறாரு? நல்ல கிறாரா? நேரு, காந்தி, எம்.ஜி.ஆர். எல்லாம் நல்லாகிறாங்களா? அல்லாம் அங்கேயும் தண்ணி கஷ்டமா?

சேதுபதி : உங்களபத்தி தானே எங்கிட்ட பேசிட்டிருந்தாரு.

கிருஷ்ணன் : என்னது... அண்ணா என்னை பத்தி பேசிக்கினு இருந்தாரா! அவருக்கு எப்படிங்க என்னை தெரியும்? உங்களையே சரியா தெரியாது.

சேதுபதி : உங்க அண்ணன் போயிட்டாரேன்னு நான் வருத்தத்தோட பேசறேன். நீங்க ஜோக்கடிக் கிறிங்களே?

கிருஷ்ணன் : என்னா சொல்ற நீ?

கோலி : சேதுபதி கொஞ்ச நேரம் சும்மாயிரு.

சிவராமன் : அதானே!

கோலி : சிவராமா அதுக்காக நான் சொல்லிட்டா ஓட முடியும். இதோடோ பக்கத்துரா பட்டுனு நின்னா சட்டுன்னு போயிட வேண்டியதுதான்.

சேதுபதி : என்ன மாப்ள லுங்கி பனியனோட வந்துருக்கிங்க.

கிருஷ்ணன் : ஏன்? கரெக்டாதான் வந்துக்கறேன். மாமா பொட்டி ரெடியா?

சேதுபதி : பொட்டியா! வைஜெயந்தி உங்க வீட்டுக்கு வரும்போது துணிமணியெல்லாம் கொண்டு வருவதற்காக புது VIP சூட்கேஸ் வாங்கி வச்சிருக்கேன்.

கிருஷ்ணன் : என்னாடா போட்.. பெருசு துணிமணிங்குது! துட்டுக்கு பதில் துணிமணி கொடுத்துடப் போவுது.

சேதுபதி : அதோட ஒரு முக்யமான விஷயம் உண்டு.

கோலி : அதானே... சிவராமா இதோ பார்! நீ சொன்னா ஸ்டோர்லயே ரஜினி ஸ்டைல்லயே கோட்சூட் வாங்கியிருக்கேன் நல்லா இருக்கா?

கிருஷ்ணன் : கோட் சூட்டா! தொபாரு! நமக்கு இந்த கோட் சூட்டெல்லாம் ஒத்து வராது. இந்த லுங்கியே போதும்.

கோலி : லுங்கியா! மாப்ள பையன் கல்யாண கோலத்துல லுங்கியோட வந்தா அசிங்கமா இருக்கும்பா.

கிருஷ்ணன் : தொபார். ஏய் எதப்பத்தி வேணா பேசு... என் லுங்கிய பத்தி பேசாதே. கர்ணனுக்கு கவச குண்டலம் மாதிரி (சிரித்து) நமக்கு லுங்கி.



சேதுபதி : சரி... கோவிச்சுகாதிங்க. ஏய் கோலி! அவங்க அண்ணன் வரட்டும் பேசி சரி பண்ணலாம்.

கிருஷ்ணன் : என்ன மாமா முணுமுணுக்கறிங்க?

சேதுபதி : ஏன்...! அதுவந்து நீங்க லுங்கியோட இருக்க ஆசைபடறிங்க.

கிருஷ்ணன் : அதான் புது லுங்கி வாங்கிட்டு வரச் சொன்னேன்... போடா...

சேதுபதி : மாப்ள டயர்டா இருப்பீங்க என்ன சாப்டறிங்க?

போட் : ஆ... எனக்கு ஒண்ணும் வேணாம்பா வரும் போது இப்பதான் குவார்ட்டர் அடிச்சிக்கினு வந்தேன்.

கிருஷ்ணன் : ஏய் கழுதை சும்மா இர்றா... என் கூட வரும் போது குடிக்காதேன்னு சொல்லியிருக்கேன் இல்ல... வெளியில் வா. டங்கு வார்ர அறுத்துற் றேன். அது வந்து எப்பவாவது டயர்டா இருந்தா குவார்டர் அடிப்பான்.

சேதுபதி : ஓ... டானிக்கா சரி... சரி... நீங்க அந்த ரூம்ல ரெஸ்ட் எடுத்துக்குங்க.

போட் : என்ன கிருஷ்ணா! நான் புட்டுக்கறேன். ஓ... மாமா பொட்டிய மறந்துடாதிங்க.

கிருஷ்ணன் : ஏய் கழுதை! உனக்கும் மாமாவா?

போட் : மாமா பொட்டிய மறந்துடாதிங்க.

சேதுபதி : என்ன இது இவனும் பொட்டிங்கறான்.

(கல்யாணம் வருதல்)

சேதுபதி : வாங்க வாங்க என்ன லேட்டு

கல்யாணம் : அப்படி இப்படியின்னு சுத்தி அட்ரஸ் கண்டு பிடிச்சி வர்றதுக்குள்ள லேட்டாயிடுச்சி.

சேதுபதி : 4 மணிக்கு கரெக்டா வர்ரேன்னு சொன்னிங்களே... வரலியேன்னு நெனச்சேன் இதுக்குள்ள உங்க தம்பி என்னமோ சொல்லி பயமுறுத்திட்டாரு. நேற்றுதானே பேசிக்கினு இருந்தேன் சாவே வராது.

கல்யாணம் : என்ன சொல்றிங்க? ஒண்ணுமே புரியலே.

சேதுபதி : உங்களுக்கு நூறு வயசு சாவவே வராது.

(சிவராமன் வருதல்)

சிவராமன் : ஆட்டோகாரனோட தொல்லையா போச்சு. மீட்டருக்கு மேல அத கொடு.., இத கொடுன்னு...

சேதுபதி : என்ன மாப்ள இந்த பக்கமா வர்றிங்க.

சிவராமன் : இதானே வழி.

சேதுபதி : அப்படி போயிட்டு இப்படி வரிங்களேன்னு கேட்டேன்.

சிவராமன் : ஆட்டோவல வந்தமா... அதான் வந்துட்டோம்.

சேதுபதி : ஆட்டோவல வந்திங்களா போட் இல்ல...?

சிவராமன் : என்ன சொல்றிங்க...? மாம்பலத்துக்கும் மந்தைவெளிக்கும் போட் வுடுறாங்களா?

சேதுபதி : தமாஷு

சிவரான் : ஆட்டோவுல வந்தது டயர்டு

சேதுபதி : ஒரு Quarter அடிங்க.



சிவராமன் : Quarter ஆ... என்ன விளையாடறிங்களா?

சேதுபதி : டயர்டா இருந்தா Quarterதானே அடிக்கணும். அப்படின்னு போட் சொன்னான். Infact எனக்கும் உடம்பு டயர்டாயிடுது.

சிவராமன் : உம். உங்களுக்கு எதுக்கு இதெல்லாம் சாதா உறையே போதும் சீக்கிரம் டயர்டெல்லாம் போயிடும்.

சேதுபதி : ஆமா இத எப்படி சாப்பிடணும்.

சிவராமன் : ஊறுகாயோட சாப்பிடணும். சூப்பரா இருக்கும்.

கல்யாணம் : டேய் பேசாம இர்றா. அவர் இன்னமோ சொல்றாரு. நீ இன்னமோ சொல்ற. ஆமா எத்தனை மணிக்கு நிச்சயதார்தம் வச்சிருக்கிங்க.

சேதுபதி : 7½ மணிக்கு. அதுவரைக்கும் நீங்க ரெஸ்ட் எடுத்துக்குங்க. அப்புறம்...

சிவராமன் : பிரஷ்ஷா சரக்கடிக்கலாம் அதானே.

கல்யாணம் : சும்மா கலாட்டா பண்ணாதடா. அப்போ நான் மத்த ஏற்பாடெல்லாம் கவனிக்கறேன்.

(கோலி வருதல்)

சிவராமன் : அடடே வாய்யா கோலி! இப்பத்தான் வர்றியா நீ?

கோலி : கிண்டலா அன்னிக்கு நீ கேட்ட ஸ்டைல்ல கோட்சூட் வாங்கினா லுங்கி கொண்டான்றே...

சிவராமன் : லுங்கியா... எனக்கா... எனக்கு லுங்கி கட்டியே பழக்கமே கிடையாது. ம்... நான் ஷார்ட்ஸ் தானே போடுவேன்.

கோலி : இப்ப என்ன ஷார்ட்ஸ் வாங்கினு வர சொல்றியா? இந்த விளையாட்டுக்கு நான் வரலேப்பா... நீ கேட்ட மாதிரி லுங்கி வாங்கினு வந்துட்டேன்... இந்தா கட்டிக்க... எனக்கு நெறைய வேலை இருக்கு

சிவராமன் : என்னடா வெளையாடறிங்களா? அவர் என்ன டான்னா Quarter அடிங்காறரு! இவன் என்ன டான்னா லுங்கிய கட்டிக்கோன்னு சொல்றான். நான் என்ன மாப்ளயா? இல்ல மாப்ள மாதிரியா?

வைஜெயந்தி : ஓ... நீங்களா?

சிவராமன் : ஏன்... வேறு யாராவது வருவாங்கன்னு நெனைச்சியா. ஏன் வந்தேன் கேக்கிறயா.

வைஜெயந்தி : போங்க.

சிவராமன் : சரி போயிடறேன். எனக்கு பதிலா ஏன்னா ஒருத்தன் வருவான். அவன கட்டிக்க.

வைஜெயந்தி : நீங்க எப்பவும் இப்படித்தான்.

சிவராமன் : எப்பவும் இப்படித்தானா. பொண்ணு பார்த்த துக்கப்புறம் இப்பத்தான் உன்ன பார்க்கறேன். என்னவோ அடிக்கடி பாத்து பேசினா மாதிரி சொல்றியே?

வைஜெயந்தி : ஒண்ணும் தெரியாத மாதிரி பேசறிங்களே. உங்க மேலே எவ்ளோ அன்பு வச்சிருக்கேன் தெரியுமா? தூங்கும்போது கனவா வருது.

சிவராமன் : தூங்கும்போது கனவுதான் வரும்.



வைஜெயந்தி : போனவாரம் நம்ம ரெண்டு பேரும் கூவத்துல உத்தமபுத்ரன் சிவாஜி பத்மினி மாதிரி டூயட் பாடினோமே.

சிவராமன் : ம். கூவத்துல டூயட்டா. அன்னிக்கு அந்த பொண்ணு டும்மிகுப்பத்துல டூயட் பாடினோம்னு சொன்னா. இவ கூவத்துல டூயட் பாடினோம்கறா... எனக்கே தெரியாம ஆளாளுக்கு டூயட் பாடு றாங்களே.

வைஜெயந்தி : நேற்றைக்குகூட ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு படம் பார்த்தமே.

சிவராமன் : அந்த படம் இன்னும் ரிலிசே ஆகலியே.

வைஜெயந்தி : சரி...

சிவராமன் : ஓ. பைத்தியமே புடிச்சிடும் போல இருக்கே.

வைஜெயந்தி : நம்ம இரண்டு பேருக்கும் கல்யாணமே ஆகலியே... இதுக்குள்ள பைத்தியம் புடிச் சுடுன்னு சொல்றிங்க?

கல்யாணம் : என்னடா அங்க நின்னு பேசிட்டிருக்க. தாலி கட்டுனதுக்கு அப்புறம் ரெண்டு பேரும் பேசிட்டே இருங்க. யாரு வேண்டான்னு சொல்றது. சீக்கிரம் ரெடியாகுடா... என்னம்மா நான் சொல்றது சரிதானே.

வைஜெயந்தி : போங்க.

சிவராமன் : போயிட்டா.

கல்யாணம் : இன்னும் ஏன் நிக்கறே... போய் ரெடியாவுடா.

சிவராமன் : நானும் போகணுமா? ம்! சரி போறேன்.

சேதுபதி : என்ன சார் ரெடியா? ஒரு முக்யமான விஷயம். பொண்ணு பார்க்க வந்தன்னிக்கே வரதட்சனை எதுவும் வேணான்னு மாப்ள சொன்னாரு. ஆனால், எனக்கு இருக்கறது ஒரே பொண்ணு அவ பேர்ல Fixed Depositல 1 லட்ச ரூபாய் போட்டு வச்சிருந்தேன். கல்யாணத்துக்கு அப்புறம் நான் காசி, ராமேஸ்வரம் போயிட போறேன். அதனாலே அந்த பணத்தை மாப்ள கிட்ட கொடுத்துடலாம்னு நெனைக்கிறேன். இத நான் வரதட்சணையா கொடுக்கலே... மாப்ளைக்கு உதவியா இருக்கும்னு கொடுக்கறேன்.

கல்யாணம் : இங்க பாருங்க, அந்த பணத்தை உங்களுக்காக வச்சுக்கங்க. எங்ககிட்ட வேணும்ற பணம் இருக்கு. ஒருத்தர்கிட்ட ஐஞ்சு பைசா வாங்கறத கூட அவமானமா நெனைப்பான்.

சேதுபதி : அப்படி சொல்லாதிங்க. இந்த பணத்தை மாப்ளகிட்ட கொடுங்க.

கிருஷ்ணன் : நிறுத்துங்க... மாப்ளகிட்ட கொடுங்கன்னு சொல்லி அந்த ஆள்கிட்ட ஏன் கொடுக்கறிங்க?

கல்யாணம் : ஏய், அவரு நமக்கு ஒரு லட்சம் கொடுக்கறேன்னு சொல்றார்ரா.

கிருஷ்ணன் : நமக்கில்ல, எனக்கு... ஆமா யார்யா நீ?

கல்யாணம் : என்னடா பேசற பைத்தியம் மாதிரி.

கிருஷ்ணன் : ஓய்... நீதான் பைத்தியம்... திடீர்னு கல்யாண வூட்ல பூந்து கலாட்டா பண்ற... எல்லாத் தையும் அப்படியே அப்பிட் வுட்டுடலான்னு பார்க்கறியா?



கல்யாணம் : என்ன! அப்பிட்டா என்னடா சொல்ற...!

கிருஷ்ணன் : என்ன அவுரு தொவுரு. தொ பாரு... கல்யாணத் துக்கு வந்தமா... மொய் எழுதிட்டு போன மான்னு இல்லாம. பர்சனல் மேட்டர்ல தலை யிடறே... சிவிடுவேன் ஜாக்ரதை.

கல்யாணம் : பேசுவடா பேசுவ... உன்னை சீராட்டி பாராட்டி வளர்த்தேன், என்னை பார்த்து இதுவும் பேசுவ... இன்னமும் பேசுவடா...

கிருஷ்ணன் : வந்துட்டார்ரா குரல் பார்ட்டி

கல்யாணம் : குரல் பார்ட்டியா

கிருஷ்ணன் : அப்படின்னா சொல்லுவேன். அப்பால வந்து கேட்டுக்க.

கல்யாணம் : அடப்பாவி! வரதட்சணை வாங்குறதும் பாவம். கொடுக்கறதும் பாவம்னு நெனைக்கிற என் தம்பின்னு பெருமையா இருந்தேன். பணத்தை பாத்து மாறிட்டியேடா.

கிருஷ்ணன் : என்னய்யா பேஜார் பண்ற நீ! என்ன சொல்ற... தம்பின்னு சொல்லி புதுசா பிட்டிங் பண்ண பாக்குற... வெளியில போய்யா...

சேதுபதி : அவரு உன் கூட பொறந்த அண்ணா.

கிருஷ்ணன் : அண்ணாவா ஆ... வந்த ஒன்னே சொன்னியே அண்ணான்னு... ஓ! நீ அந்த அண்ணாவா... எனக்கு முன்னாடியே சொல்ல கூடாது? அண்ணாத்தே தெரியாம பேசிட்டேன். நாங்க ராமர் மாதிரி அர்ஜுனன் மாதிரி.

சேதுபதி : என்ன மாப்ள தாமஷ் பண்றீங்களா.

(கிருஷ்ணன் சமாளித்தல்)

கிருஷ்ணன் : சும்மாதான் தமாஷ் பண்றேன்... எனக்கு சின்ன வயசுலேந்து தமாஷ் ஜாஸ்தி. ஒரு தபா எங்க அப்பாவயே நீ யாருன்னு கேட்டேன். அவ்வளவு தமாசு... இல்ல அண்ணாத்தே.

கல்யாணம் : ஏன்டா உன் தமாஷுக்கு அளவு இல்லியா.

கிருஷ்ணன் : இல்லியே

கல்யாணம் : நான் பயந்தே போயிட்டேன். நமக்கு எதுக்குடா பணம்.

கிருஷ்ணன் : ஆ... வந்து... இந்த பணம் எனக்கில்ல... அநாதை குழந்தைகளுக்கு உதவி செய்யத்தான் கேட்டுகறேன்.

நாராயணன் : என்னாடா கிருஷ்ணா ரூட்டு மாறுது.

கிருஷ்ணன் : சும்மா பேச்சுக்கு சொன்னேன்டா கய்தை... கம்முனு இரு.

சேதுபதி : உங்களுக்கு பெரிய மனசு.

கிருஷ்ணன் : பெரிய மனசெல்லாம் கிடையாது. அதே Self தான்.

கல்யாணம் : நமக்கு எதுக்குடா மத்தவங்க பணம்? அநாதை குழந்தைகளுக்கு நம்ம பணத்தை கொடு.

கிருஷ்ணன் : நம்ம பணமா! எங்கே கீது?

சேதுபதி : என்னங்க மாப்ள நல்ல காரியம் செய்ய போறேன்னு சொல்றாரு. இதப் போயி உங்க பணம் எங்க பணம்னு பேசறீங்க...





பக்கிரி : கிருஷ்ண்ணாத்தே...

கிருஷ்ணன் : ஆய்... என்னடா பக்கிரி... இங்க இன்னாத்துக்கு வந்தே?

பக்கிரி : ஓரம்கட்டு. உன் மாமன் தியாகி சிங்காரமும் முறைப்பெண் சிங்காரியும் இங்கதான் வேக வேகமா வந்தாங்க. நீ சிங்காரிய கட்டிக்காம வேறு யாரையோ கட்டிக்க போறியாமே?

போட் : என்னடா கிருஷ்ணா... பெருசு நம்மள பார்த்துதன்னா, கதை கந்தலாயிடும்... கொஞ்ச நேரத்துக்கு நம்ம அப்படியே மறைஞ்சிக்கு வோம்... டேய் பக்கிரி நீ புட்டுக்க.

சேதுபதி : என்ன மாப்ள... யார் இவர்?

கிருஷ்ணன் : அவரு அநாதை குழந்தைங்க... இல்ல... தலைவரு பணத்தை கேட்டாரு இல்லியா... அதான் நாளைக்கு தர்ரேன்னு சொல்லிட்டேன்.

சேதுபதி : இப்ப வேணும்னா கொடுத்துடலாம் மாப்ளே. கூப்பிடுங்க... நானே கூப்பிடறேன்.

கிருஷ்ணன் : வேணாம். நாளைக்கு நானே கொடுத்துடறேன். ஒரு நிமிஷம் உள்ள போயிட்டு வந்துடறோம். எங்கள் தேடிகினு யாராவது வந்தா நாங்க இல்லன்னு சொல்லிடுங்க. அப்புறம் எல்லாரும் பணம் கேட்க ஆரம்பிச்சிடுவாங்க. அந... உங்ககிட்ட இருக்குதோ இல்லியோ... அக்கும் வாடா போயிடலாம்.

சேதுபதி : மாப்ளைக்கு ரொம்ப பெரிய மனசு. அநாதை குழந்தைகளுக்கு உதவி பண்ணணும்னு என்னமா

துடிக்கிறாரு... இவரு மாப்ளையா வரதுக்கு நான் ரொம்ப பெருமைப்படறேன்.

கல்யாணம் : அவனுக்கு எப்பவுமே நல்ல மனசுதான். ஆனால் திடீர் திடீர்னு ஒரு மாதிரியா பேசறான்.

சிவராமன் : என்ன எல்லாரும் இங்க இருக்கிங்களா?

சேதுபதி : என்ன மாப்ள போனிங்க வர்றிங்க.

சிவராமன் : வரக்கூடாதுன்னு சொல்றிங்களா

சேதுபதி : இல்ல மாப்ள... நீங்கதானே சொன்னிங்க என்னை தேடிட்டு யாராவது வந்தா இல்லன்னு சொல்ல சொல்லி.

சிவராமன் : என்னது இது. நா யாரும் வர்றதா சொல்லவே இல்லியே.

சேதுபதி : சரி இந்தாங்க.

கல்யாணம் : உனக்கு எல்லாத்தையும் ரெண்டு ரெண்டு வாட்டி சொல்லணும். விளையாடறதுக்கு ஒரு அளவே இல்லடா. வாங்குடா முதல்ல இத. (சேதுபதி சூட்கேஸை தருதல்)

சேதுபதி : மாப்ள இத நீங்க உங்களுக்காகவா வாங்கறிங்க, அநாதை குழந்தைகளுக்காக வாங்கறிங்க.

சிவராமன் : அநாதை குழந்தைகளுக்கு எதுக்குங்க பொட்டி? துணிமணி கொடுத்தா கொஞ்சம் பிரயோஜன மாயிருக்கும்.

சேதுபதி : அதான், இத வச்சி கொடுங்க.

சிவராமன் : எங்க? மார்வாடி கடையிலயா.



சேதுபதி : அப்ப தட்டையும் மாத்திக்கலாம்.

சிவராமன் : மாத்திக்கலாம்.

சிங்காரம் : நிறுத்துறா கய்தை... என்ன தைரியம் இருந்தா எனக்கு தெரியாம வேறொரு பொண்ணை கல்யாணம் செய்துப்ப?

சிவராமன் : கிழவா உன்னையே யாருன்னு எனக்கு தெரியாது... யார்யா நீ?

சிங்காரம் : கிண்டலா பண்ற... உன்னை நெஞ்சிலயும் மார்லயும்...

சிவராமன் : ரெண்டும் ஒண்ணுதான்.

சிங்காரம் : போட்டு வளர்த்த உன் மாமன்! என்னையா யாருன்னு கேக்கற?

சிவராமன் : சூ.. இது என்னடா பெரிய வம்பா போச்சு. உங்கள யாரு இந்த மாதிரி வளர்க்க சொன்னாங்க. அப்புறம் வயசான உடனே இப்படி புலம்ப சொல்றாங்க.

வைஜெயந்தி : சிவா இவரா உங்க மாமன்! அன்னிக்கு சொன்னீங்களே.

சிவராமன் : ஏய் விளையாடறியா, நான் எப்ப உங்கிட்ட எனக்கு மாமா இருக்காருன்னு சொன்னேன்.

சிங்காரி : (சிங்காரி வைஜெயந்தியை பார்த்து) இவதான் என் சக்களத்தியா? ஏய்... அவரு இவருக்கு தாய்மாமன். இவரு எனக்கு முறைமாமன்.

சிவராமன் : ஆ...!!!

சிங்காரம் : ஏய்... பிட்பாக்கெட் அடி, வழிப்பறி செய்... கொலைகூட செய்... ஆனா உனக்கு பொண் டாட்டின்னு ஒருத்தி வந்தா அது என் சிங்காரி தான்டா.

சிவராமன் : ஆ... சிங்காரியா!!! எதுவோ அட்ரஸ் மாறி வந்துட்டிங்க... போங்க... போங்க...

சிங்காரி : யோவ், துள்ளி விளையாடுற மீன் மாதிரி நான் ஒருத்தி இருக்கப்ப நீதான்யா கருவாட்டுக்கு ஆசைப்பட்டு பால்மாறிட்ட.

சிவராமன் : என்னாது பால்மாறிட்ட.. மோர்மாறிட்டன்னு... மீனு கருவாடுன்னு இது என்ன மீன் மார்க் கெட்டா? யாரும்மா நீ?

சிங்காரி : உன் தாலி கட்டாத பொண்டாட்டியா நான்...

வைஜெயந்தி : அய்யய்.... எனக்கு தலையை சுத்துது... உவ்வே (வைஜெயந்தி வாந்தி எடுத்தல்)

சிவராமன் : நல்ல டாக்டரா போய் பாரு. அவர் சொல்வாரு

வைஜெயந்தி : எனக்கு தலையை சுத்துது.

சிவராமன் : சும்மா இருக்க மாட்டே, கோலி போலிஸே கூப்பிடு.

சிங்காரம் : கூப்பிடுய்யா... என் பொண்ணை கற்பழிச்ச குற்றம், பொய் சொல்லி இந்த பொண்ணை ஏமாத்துன குற்றம்... ஆயுள் தண்டனைதான். ஆமா போட்டு எங்க?

சிவராமன் : ஆ! காசிமேடு பீச்சில கீது போய் பாரு.



சேதுபதி : மாப்ளே... அவரு உங்க பிரண்ட் போட்ட கேக்கறாரு.

சிவராமன் : என் பிரண்ட் Friend போட்டா, மோட்டார் போட்டா, சாதா போட்டா?

சிங்காரம் : போட்டு எட்டி பார்க்கறான். டேய் வாடா இங்க.

போட் : அய்யே எனக்கு ஒண்ணும் தெரியாது.

சிங்காரம் : வாடா வா... இவனுக்கு ஐடியா கொடுத்தது நீதானே. இங்க என்ன நடக்குது... மரியாதையா சொல்லு. இல்ல...

போட் : அ... அண்ணாத்தே... அது... அது சொல்லிடறேன் அண்ணாத்தே... அடிக்காதே அண்ணாத்த.

சேதுபதி : அப்ப என் மாப்ள மாதிரியே இன்னொருத்தர் இருக்காரா? சரி கிருஷ்ணன கூப்பிடு.

கிருஷ்ணன் : தே மாமா உனக்கு அறிவிருக்குதா? கடைசி நேரத்திலே உள்ள பூந்து கெடுத்துட்டிய.

சிங்காரம் : செய்யற காரியம் திருட்டு. இதுல என்ன பிளானு.

கிருஷ்ணன் : யோவ். எதுவோ துட்டு கிடைக்குமேன்னு அண்ணாத்தேன்னு மரியாதை கொடுத்தேன். ஏதுவாவது பேசுன மவன டாக்கா வுட்டுரும்.

சிங்காரம் கையில் அருவாளு மச்சம்.

சிந்தாமணி சிங்காரம் தானே.

அப்ப நீ

கிருஷ்ணன் : என்னடா இது இன்னா பேசிக்கறாங்க புரியலையே.

கதை கேளு கதை கேளு
நிஜமான கதை கேளு
(பாடல் ஒலிக்கிறது)

சிவராமன் : அப்ப இந்த கிருஷ்ணன் என் தம்பியா.

கிருஷ்ணன் : அண்ணாத்த...

சிங்காரம் : ஆ என்ன பாசபிணைப்பு! இத நெனைக்கும் போது எனக்கு அழுகை அழுகையா வருது.

கல்யாணம் : எனக்கும்தான்.

சிவராமன் : தயவுசெஞ்சு யாரும் அழாதிங்க.

சிங்காரி : என்னாது கிருஷ்ணா அது உன் அண்ணனா?

கிருஷ்ணன் : அக்காம்! என்னை மாதிரிய இருக்கறார் பாரு.

கோலி : அப்ப நான் லட்ச ரூபாய் மேட்டர கிருஷ்ணன் கிட்ட தான் சொன்னனா?

சேதுபதி : எம் மாப்ள என் பொண்ணோட பங்கு போட்டுக்க இன்னொருத்தி வந்துட்டாளேன்னு பயந்து போயிட்டன். அப்படி நடக்கல. இந்த ஒரு லட்ச ரூபாய பங்கு போட்டு என் சின்ன மாப்ளைக்கு தர போறேன்.

சிவராமன் : அப்ப கிருஷ்ணன் உங்க சின்ன மாப்ளயா? மாமா நீங்களும் 25 வருஷத்துக்கு முன்னாடின்னு ஒரு கதைய சொல்ல போறிங்களா?

சேதுபதி : சேசே! ஒரு பேச்சுக்கு சொன்னேன். சிங்காரிய எம் பொண்ணா நெனைச்சுக்கறேன்.

கோலி : எப்படியோ வெங்கடாஜலபதி அருளாலே எல்லாம் நல்லபடியா முடிஞ்சுது. திருப்பதிக்கு



போய் மொட்டை போட வேண்டியதுதான் பாக்கி. நான் வேண்டிகிட்டது உங்களுக்குதான்.

முதல்ல அத செய்

சிங்காரம் : என்னை மன்னிச்சுக்க சிவராமா. உன்னை கிருஷ்ணன்னு நெனைச்சி கண்டபடி பேசிட்டன்.

வைஜெயந்தி : சிவா உங்களை கிருஷ்ணன்னு நெனச்சி உங்க தம்பிய நீங்கன்னு நெனைச்சி.

சிவராமன் : நான்னு நெனச்சி...!

வைஜெயந்தி : காபி கொடுத்தேன்னு சொல்ல வந்தேன்.


சிவராமன் : அதல்லாம் இருக்கட்டும் என் தம்பி தானே.

கிருஷ்ணன் : எல்லாரும் கால்ல வுழுங்க... ஆளுக்கு 50,000 மொய் எழுதப் போறாங்க... கால்லவுழுங்க அண்ணாத்த... ஆசீர்வாதம் பண்ணிக்க.

கல்யாணம் : ஆனந்தமாக நிலைமையை நினைச்சி பார்க்கும் போது...

சிவராமன் : நினைக்காதே.

**சுபம்**


நாடகப்பிரியா Win
எஸ்.வி.சேகர் in
இனிமே
நாங்க
தான்
MAX
அல்லயன்ஸ்